VISIT…

10

ஒருகணம் என்ன செய்வதென்றே புரியவில்லை அபீதாவுக்கு.

நேராகச் சென்று இருவரையும் கையும் களவுமாய்ப் பிடித்தால் என்ன என்று தோன்றியது.

ஆனால் அதில் ஒரு கஷ்டம்.

தப்பு செய்கிறவர்களில் ஒருவன் முதலாளி.

பிடிக்கச் செல்கிற இவளைய வேலையை விட்டு விரட்டி விடலாம்

எத்தனையோ ஆகாயக் கோட்டைகளோடு நல்ல சம்பளமும் போய் விடும்.

இப்போது விட்டுவிட்டால் பிறகேனும் கல்பனாவுக்கு துரோகம் அது இது என்று ஏதாவது சொல்லிப் பார்க்கலாம்.

சிந்தித்தபடியே அவள் நின்றது மிஞ்சி மிஞ்சி ஒரு நிமிடம் கூட இராது.

அதற்குள் மீண்டும் மதுராவின் அறையை விட்டு வெளியே வந்ததும் மறுபடியும் அபீதாவை வியப்பில் ஆழ்த்தினான் சத்யன்.

சட்டென மறைந்து கொண்டு கவனித்தாள்.

பழையபடியே கதவைப் பூட்டிச் சாவியை எடுத்துக் கொண்டு வேகமாகச் சென்று விட்டான் அவன்.

மதுராவின் அறையில் தங்காமல், தாமதிக்காமல் சத்யன் சென்றுவிட்டது சற்றே நிம்மதியை அளித்த போதும், 'மாஸ்டர் கீ' கொண்டு திறந்து அவளது அறைக்குள் அவன் சென்றதே அபீதாவுக்கு ஆத்திரத்தை ஊட்டியது.

ஒரு சாதாரண 'வெயிட்டர்' வேலை செய்கிற ஒருத்தியின் அறைக்குள் இரவில் இவனுக்கு என்ன வேலை?

இனி வெகு ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் என்று முடிவு செய்தாள் அவள்.

காலையில் காபிட்ரேயோடு சென்று என்னென்ன தனுக்கு காட்டுகிறாளோ இந்த மதுரா.

இன்று நீச்சல் உடையில் எப்படி எப்படி அலுக்கி குலுக்கினாளோ.

யானை தன் தலையில் மண்ணைப் போட்டுக்கொண்டாற் போலத் தானே அவனை அங்கே அனுப்பிவைத்தாளே!

இனி இதற்கெல்லாம் இடம் அளிக்கலாகாது.

முதல் நடவடிக்கையாக, காலைக் காபியுடன் மதுரா அவன் அறைக்குச் செல்வதைத் தடுத்து நிறுத்தினாள்.

"பாஸ் அறைக்கு காபியை இனி நீ எடுத்துச் செல்ல வேண்டாம்." என்றாள், காபிட்ரேயுடன் வந்த மதுராவிடம்.

உடனே ஒத்துக்கொண்டு திரும்பினாள் மதுரா.

முந்தைய நாள் நிகழ்ச்சியின் பின் காலையில் தனிமையில் அவன் முகத்தில் எப்படி விழிப்பது என்று உள்ளூரக் கலங்கிக் கொண்டு இருந்தவள் ஆயிற்றே.

ஒரு பெரிய சுமை இறங்கினாற் போல அவள் திரும்பவும், காரணமற்று இன்னமும் ஆத்திரம் பற்றிக்கொண்டு வந்தது அபீதாவுக்கு.

மதுராவை நிறுத்தி, "உன் முகத்தில் விழித்தால் நானே கெட்டுவிடுகிறதாம் அதனால் என்னைக் கொண்டு வரச் சொன்னார்." என்று ட்ரேயை வாங்கிக் கொண்

டாள். ''கொஞ்ச நாளில் எங்கள் இருவருக்குமே யாரைக் கொண்டுவரச் சொல்வது?'' என்று முணுமுணுத்தாள்.

மதுராவின்முகவாட்டம் திருப்தியைத்தர, ட்ரேயுடன் சத்யனுடைய அறைக்குள் சென்றாள்.

மதுராவின் முகம் மேலும் வாடிப் போயிற்று.

சத்யனுடைய மனைவி எங்கே?

இந்த மாதிரிப் பெண்களையெல்லாம் நம்பி விட்டு விட்டுக் கணவனைப் பிரிந்து எங்கே சென்றாள்?

அல்லது கணவனிடம் அவளுக்கு அவ்வளவு நம்பிக்கையா?

அந்த மாதிரி நம்பிக்கைக்குத் தகுந்தவனாக அவன் முன்தினம் நடந்து கொள்ளவில்லையே.

அவன் எப்படிப் போனால் நமக்கென்ன என்று இருக்க முடியாமல் உள்ளூர மனம் துடித்தது.

இந்த வேதனைபோடு அன்று காலையிலிருந்து இன்னொரு குழப்பமும் கூட.

கதகதவென்று இதமாய்ப் போர்த்திருந்த அந்த விலை உயர்ந்த கம்பளிப் போர்வை எப்படி வந்தது? எங்கிருந்து வந்தது?

இத்தனை நாள் படுக்கைகளை விரித்து, மடித்து எல்லாம் செய்ததில் இந்தப் போர்வை அந்த ஸ்டார் ஓட்டலிலும்கூட மிக ஸ்பெஷல் ரக அறைகளைச் சேர்ந்தது என்பதைக் கண்டு கொண்டாள்.

அதில் எந்த அறையைச் சேர்ந்ததாக இருக்கும்?

அதைவிடவும் பூட்டிய அறைக்குள் அந்தப் போர்வை எப்படி வந்தது.

உள்ளே பூட்டி எடுத்த சாவி அவளது தலையணையின் கீழ் வைத்தபடியே இருந்தது.

பின்னே?

மதுரா முட்டாள் அல்ல.

இந்தப் போர்வை அந்தரத்தில் இருந்து வந்து குதித்தது என்று நம்ப அவள் தயாராக இல்லை.

இது எப்படி வந்திருக்கும் என்று அவளுக்கு ஒரு ஊகம் இருந்தது.

அதை யாரிடமும் கேட்டுத் தெரிந்து கொள்ள முடியாமல் சூழ்நிலை தடுத்தது.

தானே அறிந்து கொள்ளும் வகை நாடிக் காத்திருந்தாள்.

கையில் காலைப் பத்திரிகையுடன் அமர்ந்திருந்த சத்யன், அபீதாவைக் கண்டதும், ''இது உன் வேலையில்லையே, அபீதா.'' என்றான்.

''என்ன செய்வது?'' என்று ஒரு பெருமூச்சுடன் காபிட்ரேயை அவன் முன்னே டீபாயில் வைத்தாள் அவள்.

''அந்தப் புதிய பெண்—அவள்தான் மதுரா—ரொம்பவும் ஸ்லோ, சத்யன் கடைசியாக, உங்கள் ஃப்ளோர் மானேஜராக இருந்தும் வெயிட்டர் வேலையையும் சேர்த்து நானே செய்யும்படி ஆயிற்று. ஊம்.'' என்று இன்னொரு பெருமூச்சையும் விடுத்தாள்.

''ஏன்? இன்னொரு பெண்ணை வேலைக்குச் சேர்த்துக் கொள்வதுதானே.'' என்றான் சத்யன் மீண்டும் பத்திரிகையில் கவனத்தைச் செலுத்தியபடி.

''இரண்டு பேருக்கு வீணாகச் சம்பளம் கொடுத்துக் காசைக் கரியாக்குவதா? இதற்குச் சம்மதிக்கவா நான்

ஓட்டல் 'மானேஜ்மெண்ட்' படித்தேன்? பேசாமல் இவளுக்குச் சீட்டைக் கிழித்துவிட்டுக் கொஞ்சம் சுறுசுறுப்பான ஒருத்தியை அமர்த்தினாலே போதுமே" என்றாள் அபீதா இலகுவாக.

சத்யன் பத்திரிகைக்குள்ளேயே முழுகிவிட்டான் போலும்.

அவன் பதிலுக்காகக் சற்று நேரம் காத்திருந்து விட்டு," செய்யட்டுமா?" என்றாள் அவள் கொஞ்சற் குரலில்.

பேப்பரை மடித்துப் போட்டுவிட்டு எழுந்து சன்னல் அருகே சென்று வெளியே பார்க்கலானான் சத்யன்.

திரும்பாமலே, "அதைப் பிறகு பார்க்கலாம். தேவைப் பட்டால் இப்போதைக்கு இன்னொரு பெண்ணை வேலைக்குச் சேர்த்துக் கொள்." என்று முடித்துவிட்டான்.

சற்றும் இளகாமல் நேராக நின்ற அவன் முதுகைப் பார்த்துப் பல்லைக் கடித்தாள் அபீதா.

உடனே போர் முறையை மாற்றினாள்.

"மெலிந்திருக்கிறீர்களே, சத்யன்?" என்றாள் உருக்கத்துடன்.

"இல்லையே. அதே 'வெயிட்' தானே இருக்கிறேன்." என்றான் சத்யன் உணர்ச்சியற்ற குரலில்.

"இல்லவே இல்லை" என்று எழுந்து அவன் அருகில் வந்தாள் அபீதா. கையை நீட்டி அவன் கன்னத்தைத் தொட்டு, "இங்கெல்லாம் ஒட்டிப் போயிருக்கிறதே," என்று வருத்தம் காட்டினாள்.

மெல்ல அவன் அகலவும், "கல்பனாவிடம் உங்களைப் பார்த்துக் கொள்வதாக வாக்குக் கொடுத்திருக்கிறேன். என் முழு மனதோடு..." என்று அவள் தொடர்கையில் அவன் குறுக்கிட்டான்.

"அதெல்லாம்தான் முன்பே சொல்லியிருக்கிறாயே. நான் வெளியே கிளம்பவேண்டும், இப்போது போகிறாயா? அபீதா?" என்றான் பழைய குரலிலேயே.

பெருமுயற்சி செய்து முறுவல் மாறாமல் காத்தபடி வெளியேறினாள் அபீதா.

கையில் படுக்கை விரிப்புகளுடன் வந்த மதுராவிடம் அந்த ஆத்திரமெல்லாம் பாய்ந்தது.

அன்று முழுவதும் அவளை ஓடஓட விரட்டியடித்தாள்.

அந்த ஓட்டலில் மேல்தளங்களுக்கென இரண்டு வெயிட்டர்கள் உண்டு.

சத்யன் 'பாஸ்.'

ஏனவே விதி முறைகளுக்கு அப்பாற்பட்டவன் போலும்.

மற்றபடி ஆண்கள் தனித்து வந்து தங்கும் போது அவர்களுடைய தேவைகளைக் கவனிப்பது ஆண் வெயிட்டர்கள்தான்.

பெரும்பான்மை ஓட்டல்களில் இந்த வேலையைச் செய்வது ஆண் வெயிட்டர்கள் அல்லது பேரர்களேதான்.

ஆனால் இந்த ஓட்டலில் தனிலவுத் தம்பதிகளும் குடும்பத்துடன் தங்குகிறவர்களும்கூட நிறைய வருவதால் அவர்களுக்காகப் பெண் வெயிட்டரையும் நியமித்து இருப்பதாகக் உடன் வேலைசெய்த ஆண் வெயிட்டர் மதுராவிடம் சொல்லியிருந்தான்.

ஆயினும் கீழே சென்று 'பாரில்' ஆர்டர்படி எடுத்து வருவது, பில் காப்டனிடம் தகவல் சொல்வது என்பது போன்ற வேலைகளை ஆண் வெயிட்டரே செய்வது வழக்கம்.

ஆனால் இன்று அந்த வேலைகளுக்கும் மதுராவையே ஏவினாள் அபீதா.

ஓர் அறையில் மதுவை வைத்துவிட்டு வந்ததன் பலன் 'இதோ உன் டிப்ஸ்' என்று அவள் கையைத் தொட்டு அந்த அறைக்காரன் பணத்தை வைத்து அழுத்தியதும் தெரிந்தது.

உடம்பு கூசிக் குறுக, ''வேவேண்டாம். நன்றி'' என்று வேகமாக அறையைவிட்டு வெளியேற முயன்றாள் அவள்.

ஏதோ வேடிக்கையைக் கண்டுவிட்டாற்போல அவனோடு இருந்த பெண்சிரிக்க, மதுராவை அவன் அழைத்து ''இன்று மாலை ஆறு மணிக்கு நாங்கள் செக் அவுட் செய்யவேண்டும், ஏற்பாடு செய்.'' என்று கூறி அனுப்பினான் அந்த மனிதன்.

வெளியே வந்து கதவைச் சாத்திய மதுராவுக்குத் தன்னைச் சமாளித்துக்கொள்ளச் சற்று நேரம் பிடித்தது.

ஆனாலும் அவளுக்கு ஒன்றும் புரியவில்லை.

தன் கணவன் இன்னொரு பெண்ணின் கையைப் பற்றி அழுத்துவதைக் கண்டு ஆத்திரப்படுவதை விடுத்து அந்தப் பெண் ஏன் அப்படிச் சிரிக்கவேண்டும்?

இந்தப் புதிரின் விடை விரைவிலேயே கிடைத்தது.

அவர்களைக் காலி செய்வது பற்றி மதுரா, அபீதா வீட்டம் தெரிவிக்கச் சென்றபோது அங்கே வரவேற்பில் பணியாற்றும் மூவரில் ஒருத்தியான லீலாவும் இருந்தாள்.

அன்றைய 'ஈவினிங்பார்ம்' ஆரஞ்சு வண்ண ஷிப்பான்.

அதுவும் நன்றாகத்தான் இருந்தது.

அபீதாவும் அவளுமாக ஏதோ பேசிச்சிரித்துக் கொண்டிருந்தபோது தான் மதுரா அங்கே சென்றாள்.

''என்ன?'' என்றாள் அபீதா அதிகாரமாக.

''நாலாம்தளத்தில் ஏழாம் நம்பர் அறையில் ஆறு மணிக்கு பெல் காப்டனை வரச் சொன்னார்கள். அவ...''

''காலி செய்கிறார்களா அல்லது அவள் மட்டும் போகிறாளா?'' என்று குறுக்கிட்டுக் கேட்டாள் லீலா.

''கணவன் மனைவி இருவருமேதான்...'' என்று மதுரா முடிக்குமுன் மற்ற இருவரும் உரக்கச் சிரிக்கத் தொடங்கினர்.

புரியாமல் மதுரா விழித்தபோது கண்ணில் வழிந்த சிரிப்புக் கண்ணீரைத் துடைத்தபடி அபீதா சொன்னாள். ''மனைவியாம் மனைவி இவன் அழைத்து வருகிறவள் எல்லாம் அவன் மனைவி ஆகிவிடுவாளா? அப்படித் தடவைக்கு ஒரு மனைவி எங்கே கிடைப்பாள்?'' என்றாள் ஏளனமாக.

''சிவப்பு விளக்குப் பகுதியில் கிடைப்பாள்'' என்றாள் லீலாவும் அதே குரலில்.

தொடர்ந்து, ''ஆனால் நன்றாகச் செலவு செய்கிறான். அபி, நேற்று நம் 'ஷாப்பிங் சென்டரில் மட்டும் பத்தாயிரம் ரூபாய்க்கு வாங்கிக் கொடுத்தான். பார்க்கப் பார்க்க எனக்கு வயிறு எரிந்தது.'' என்றாள் பொறாமையோடு.

ஆனால் மதுராவின் கவலை வேறு திசையில் பாய்ந்தது. ''ஆனால் இந்த மாதிரி ஆட்களுக்குத் தங்க இடம் கொடுத்தால் ஓட்டல் பெயர் கெட்டு விடாதா?'' என்று தன்னையறியாமல் கேட்டு விட்டாள்.

''அதெப்படிக் கெடும்?'' என்றாள் அபீதா அழுத்தம் திருத்தமாக. ''இந்தப் பெண்களை நாமாக சப்ளை செய்வது இல்லை. ரிஜிஸ்டரில் கணவன் மனைவி என்று பக்காவாக எழுதிக் கையெழுத்துப் போட்ட பிறகுதான் ரூம் கொடுக்கிறோம். பிறகு நம் மீது என்ன குற்றம்? கணவன் மனைவி என்று அவர்கள் சொல்வதைத் தானே நம்பியாக வேண்டும்? வருகிறவர்களை எல்லாம் குலம். கோத்திரம்,

வம்சாவளி விசாரித்துதான் தங்க விடுவது என்றால் அப்புறம் சத்யன் தலையை மொட்டை அடித்துக் கொண்டு வயிற்றில் ஈரத் துணியைச் சுற்றிக் கொள்ள வேண்டியதுதான்." என்று கேலியாகச் சிரித்தாள்.

"அடுத்த தடவை அவன் வரும் போது நாமும் கொஞ்சம் தூண்டில் போட்டுப்பார்க்கலாமா, அபி? மாட்டினால் இருபது ஆயிரமாவது தேறுமே." என்று வேடிக்கையும் வினையுமாகப் பேசிக் கண்ணடித்தாள் லீலா.

அவளிடம் ஏதோ பதில் கூறத் தொடாடங்கிய அபிதா சட்டென நிறுத்திக் கொண்டு, "இங்க என்ன வம்பளந்து கொண்டு நிற்கிறாய்? எப்போது காலி செய்கிறார்? ஆறு மணிக்கா? ஒடு, மற்ற வேலைகளை முடித்து விட்டு மதியம் சென்று பெல் காப்டனிடம் சொல்லிவை. போ." என்று விரட்டினாள்.

அபிதா சுமத்திய அதிகப்படி வேலைகளுக்கு நடுவே வழக்கமான லைகளையும் செய்து கொண்டே வந்தாள் மதுரா.

கடைசியாக சத்யன் வெளியேறிச் சென்றதும் அவன் அறைக்குப் புதிய விரிப்புகளுடன் சென்ற போது அவளது ஐயம் தெளிவாயிற்று.

இதயம் இருந்த இடத்தில் இரும்பு குண்டு ஒன்றும் வந்து அமர்ந்தது.

அந்தப் போர்வை சத்யனுடையது தான்.

அவன் தான் இரவில் எபபோதோ அந்தப் போர்வையுடன் வந்து அவளுக்குப் போர்த்தி விட்டிருக்க வேண்டும்.

மானேஜிங் டைரக்டர்!

ஆபீஸ் பொறுப்பில் இருக்கக் கூடிய—அல்லது அவன் பெறுப்பிலேயே இருந்திருக்கக் கூடிய 'மாஸ்டர் கீ' யைக் கொண்டு அவள அறையைத் திறந்து உள்ளே வருவது அவனுக்குக் கடினமில்லை.

ஆனால் அவன் அப்படி வந்திருந்த நேரத்தில் யாராவது பார்த்திருந்தால் அவளுக்கு எவ்வளவு அவப் டெயர் கிட்டியிருக்கும்!

குளிருக்காகப் போர்வையைப் போர்த்துக் கொண்டு வந்தானோ அல்லது யாரும் அறிந்துக் கொள்ளக் கூடாது என்று மூடிக் கொண்டு வந்தானோ.

வந்தவன் எதனால் திரும்பிப் போனானோ, ஆனால் அவன் நோக்கம் பற்றி ஊகிக்க அதிகம் யோசிக்க வேண்டியது இல்லையே.

அவன் வாயாலேயே சொன்னானே, 'தப்பு சரி பற்றி அக்கறை இல்லை' என்று;

"காரண்டி இல்லாதபோதுஏன் விடவேண்டும்" என்று

அவன் அவ்வளவு சொன்ன பிறகும் அவன் அணைப்பில் மயங்கத் தொடங்கியதும் நினைவு வந்தது.

எத்தனையோ உயர்ந்த கோட்பாடுகளுடன் வளர்ந்த அவள் கடைசியில் என்ன ஈனத்துக்கு ஆளாகப் போகிறாள்!

சுய நினைவு நன்றாக இருக்கும் போதே எல்லாவற்றையும் உதறிவிட்டு ஓடிவிடலாம் என்றால் அவள் முதலில் அங்கே வர நேர்ந்த சூழ்நிலை சற்றும் மாற்றமின்றி அப்படியே இருந்தது.

இவ்வளவு தூரம் திட்டமிட்டு அவளை வரவழைத்தவன் தானா அவளை விடுவிக்கப் போவது இல்லை.

தம்பியிடம் சொன்னது போலத் தற்காத்துக்கொள்ளும் சக்தி—சக்தியைக் காட்டிலும் மன உறுதி தன்னிடம் நிலைத்திருக்கும் என்ற நம்பிக்கையும் அவளுக்கு இல்லை.

அதலபாதாளத்தினுள் அழுந்தப் போகும் இந்த அழிவில் இருந்து அவளைக் காக்கும் சக்தி யாருக்குமே இல்லையே—அவள் உட்பட.

கரகரவென்று கண்ணீர் பொங்கி வழியச் சற்று நேரம் அழுதாள்.

அறையில் சுவர்க் கடிகாரத்தின் குயில் கூவத் தொடங்கியது. மணி பன்னிரண்டு!

இன்னமும் இருந்த வேலைகளை அது நினைவுறுத்தக் குளியல் அறைக்குள் சென்று முகம் கழுவிக்கொண்டு தன் பணிகளைத் தொடர்ந்தாள்.

மறக்காமல் முதலில் பெல் காப்டனிடம் சென்று அறை காலியாவது பற்றித் தகவல் தெரிவித்தாள்.

இந்தப் புதிய பெண்ணின் கண்களில் இருந்த சோகம் அவர் மனதை இளக்கியதோ.

''ஏம்மா, வேலை அதிகமாய் இருந்ததா? வா. உட்கார். ஒரு சாயா குடித்துவிட்டுப் போ. எந்தா, சுதீரன் ஒரு சாய் வாங்கி வா.'' என்று பெல் பாய் ஒருவனை அனுப்பினார்.

உட்காராமல், ''வேலை இருக்கிறது, சார். டீ வேண்டாம்.'' என்றாள் மதுரா.

''வேலை தானே. அதுதான் எப்போதும் உனக்கு இருந்து கொண்டே இருக்கிறதே. சங்கரன் பாரில் இருந்தார். தேடிக் கண்டு கொள்ளுமுன் நேரமாகிவிட்டது என்று சொல்லு. உட்கார்.'' என்று பிடிவாதமாய் டீயை அருந்த வைத்தார். அவள் குடிக்கையில் அது இது என்று கதை சொன்னார்.

''டீ நன்றாக இருக்கிறது, சார்.'' என்று முயன்று மெல்ல முறுவலித்தாள் மதுரா.

''அதுதான் முகமும் தெளிந்திருக்கிறது. ஏம்மா, தாயாரோட நினைப்பு வந்ததா? இனி அந்த மாதிரி நினைப்பு வந்தால் இந்தத் தகப்பனிடம் வா. நாலு கதை

சொன்னேன் என்றால் எல்லாம் மறந்து போகும்.'' என்று கூறி அனுப்பி வைத்தார். ''எல்லாம் என்றன் தாயார் சொன்ன கதைகளாக்கும்.'' என்ற ஒரு சிமிட்டலோடு.

பதிலுக்குப் புன்னகைத்து விட்டுத் திரும்பிய மதுராவுக்கு மெய்யாகவே மனம் சற்றுத் தெளிந்திருந்தது.

ஆனால் அவர் சொன்ன கதைகளால் அல்ல.

அவர் சொன்ன 'தாயார்' என்ற ஒரு வார்த்தையால்.

அந்த வார்த்தையின் மூலம் சத்யனுடைய தாயாரை அவர் நினைவூட்டியதால்.

இழிவிலிருந்து அவளை மீட்கும் சக்தி படைத்த ஒரே ஜீவன் அவர் அல்லவா?

11

சத்யனுடைய தாயார் இப்போது எங்கே இருக்கக் கூடும்?

எங்கானாலும் அதிக தூரத்தில் இருக்க முடியாது என்பது நிச்சயம்.

ஏனெனில் அன்று அவர் பேசியதில் இருந்து எல்லோரும் அருகருகே இருப்பது போலத்தான் தோன்றிற்று.

அவருடைய இருப்பிடம் பற்றித் தெரிந்து அதை அவளிடம் சொல்லவும் கூடிய ஒரே ஆள் தாமஸ் தாத்தா தான்.

சத்யனுடைய தாயாரைப் பற்றி அறிந்து கொள்ளும் ஆவலில் மதிய உணவையே விடுத்துத் தாமசை நாடிச் சென்றாள் மதுரா.

இப்போது சங்கரன் வாங்கித் தந்த டியூப் போதும், வேறு உணவு அவசியமில்லை; முக்கியமாக இப்போது உணவருந்தச் சென்றால் தாமசை இரவுதான் பார்க்க முடியும். அதன் பிறகு அந்த அன்னைக்குக் கடிதம் எழுதுவது என்றாலும் மறுநாள்தான் முடியும்.

அனாவசியமாக ஒரு நாள் தாமதம் எதற்கு?

அங்கே தன் உணவுப் பொட்டலத்தைப் பிரித்துக் கொண்டிருந்தான் அவன்.

வேகம் வேகமாய் மூச்சிரைக்க வந்து நின்ற மதுராவைப் பார்த்ததும் ஆச்சரியத்துடன், "என்ன மதுராம்மா, இந்த வேளையில், இவ்வளவு அவசரம்?" என்று விசாரித்தான்.

சட்டெனத் திகைத்து மருண்டாள் மதுரா.

சத்யனுடைய குடும்பத்துடன் நல்கு பழகிய தாமசிடம் கேட்டால் அவன் தாயின் விலாசம் தெரியும் என்று எண்ணி அவள் வந்ததெல்லாம் சரிதான்.

ஆனால் இவ்வளவு பெரிய நிறுவனத்தின் முதலாளியுடைய தாயாரைப் பற்றி சாதாரணப் பணிப் பெண் ஒருத்தி விசாரிப்பது எந்த விதத்தில் பொருத்தம்?

தப்பாக நினைக்கமாட்டானா இந்தத் தர்த்தாத்?

அகப் போராட்டத்தை முகம் காட்டவும், "என்னம்மா, என்ன விஷயம்? எதுவானாலும் இந்தத் கிழவனிடம் சொல்லுதாயி" என்று பரிவாக வினவினான் அவன்.

சம்பிரதாயம் பார்க்கும் நேரம் இது அல்ல என்று முடிவுக்கு அதற்குள் மதுராவும் வந்துவிட்டிருந்தாள்.

"எம்.டி.யின் அம்மா எங்கே இருக்கிறார்கள்? அவர்கள் விலாசம் வேண்டும்" என்றாள் மொட்டையாக.

கிழவனின் பார்வை கூர்மையுடன் தன் முகத்தில் பதிவதை உணர்ந்தாள்.

எதிர்பார்த்ததுதான்!

கன்னம் சிவந்தபோதும் தரையிலிருந்து பார்வையை உயர்த்தாமல் அப்படியே நின்றாள்.

தாமசும் அதிக நேரம் அவளைத் தவிக்க விடவில்லை.

"முதலில் உட்காரம்மா" என்று எதிரே இடத்தைக் காட்டிவிட்டுச் சொன்னான். "பெரியம்மா, வெளி தேசமில்ல போயிருக்கிறாங்க;" என்று குண்டைத் தூக்கிப் போட்டான்.

"ஓ'... ஆனால் எப்போது திரும்பி வருகிறார்கள், தாத்தா?" என்று அதிர்ச்சியைச் சமாளித்துக் கொண்டு வினவினாள் அவள்.

"அது ரொம்ப நாளாகும்மா. இப்பத்தான், நீ வரதுக்கு இரண்டு நாளு முன்னதாக போனாங்க. நம்ம சின்னதுரையோட தங்கச்சி மாமியாரு, மாமனாரு எல்லாம் மூணுமாசம் உலகம் சுத்திப் பார்க்கிற 'டூர்' போகிறாங்களாம். அவங்ககூடப் போய்ப் பார்த்துவிட்டு வருகிறதாகப் பெரியம்மாவும் போனாங்க..."

இடிந்து போனாள் மதுரா.

உலகம் சுற்றச் சென்றவர் இவளுக்காக இடையில் திரும்பிவந்து மகனுடன் பேசப் போகிறாரா?

முதலில் அவரிடம் விஷயத்தைத் தெரிவிப்பது எப்படி?

'இதை ஏன் கேட்கிறாய்' என்று நல்ல வேளையாக அவன் கேட்கவில்லை.

மாறாக, "சின்னம்மா விலாசம் வேணுமாம்மா?" என்று கிழவன் கேட்கவும் மீண்டும் திகைத்தாள்.

சத்யனுடைய மனைவி!

அவளிடம் என்ன சொல்வது?

உன் கணவன் என்னிடம் தகாத முறையில் நடக்க முயல்கிறான் என்று சொல்வதா?

சொல்லி அதை அவள் நம்பினாலும் நம்பாவிட்டாலும் இரண்டுமே கஷ்டம்தான், கேவலம்தான்.

ஆனால். விலாசத்தை அறிந்துகொண்டு ஒரு மொட்டைக் கடிதம் போல எழுதி அவளை வரவழைத்து விட்டால்?

அவள் வந்துவிட்டால் சத்யனுடைய போக்குமாறி விடாதா?

ஆயினும் கல்பனாவைப் பற்றி இலகுவாகப் பேச அவளால் முடியவில்லை.

இறுகிப் போயிருந்த உதடுகளைப் பிரித்து, ''எம்.டி. யின் மனைவி எங்கே போயிருக்கிறார்கள், தாத்தா? பிறந்த வீட்டுக்கா?'' என்று மெல்ல வினவினாள்.

ஒருகணம் பெருவியப்புடன் மதுராவை நோக்கினான் கிழவன். பிறகு சொன்னான், ''உனக்கு விஷயமே தெரியாதாதாயி? சின்னராணி இறந்து வருசம் மூணாவுதே.

முன்னதை விடவும் பயங்கரமாய் இருந்தது இந்த அதிர்ச்சி.

சற்று நேரம் ஒன்றுமே தோன்றாமல் மலைத்து நின்றாள் மதுரா.

பிறகு அவளுக்கே புரியாதபடி அழவேண்டும் போலவும் ஆத்திரப்பட வேண்டும் போலவும் அப்பாடி என்று மூச்சு விடவேண்டும் போலவும் என்னென்னவோ தோன்றியது.

''என்னதம்மா? என்ன விஷயம்?'' என்று அவன் திருப்பித் திருப்பிக் கேட்டபிறகுதான் சூழ்நிலை நினைவு வந்தது அவளுக்கு.

''ஒ... ஒன்றுமில்லை தாத்தா, நான்...நான் என் அறைக்குப் போகிறேன்.'' என்று திரும்பி மடமடவென்று நடந்தாள்.

இப்போது எல்லாவற்றையும் விட அவளுக்குத் தனிமை மிகவும் தேவையாக இருந்தது.

பணியாளர் பகுதிக்குச் செல்லும் திருப்பத்தில் நின்று சற்று யோசித்து முதல் தளத்தை அடைந்தாள்.

நல்ல வேளையாக ரெட்டி மட்டுமே இருந்தார்.

அவரிடம் உடம்பு சரியில்லை என்று அரைநாள் விடுப்புக் கேட்டாள்.

அவர் சற்றே தயங்கவும், மறுநாள் அதிகப்படி நேரம் வேலை செய்வதாக வாக்களித்து விடுமுறை பெற்றாள்.

நேரே தன் அறைக்குச் சென்று உள்ளே பூட்டிக் கொண்டு தொப்பென்த் தரையில் விழுந்தாள்.

ஆக சத்யனுடைய மனைவி கல்பனா இப்போது உயிரோடு இல்லை.

மூன்றாண்டுகளாகவே இல்லை.

தான் என்ன மாதிரி உணர்கிறோம் என்று மதுராவாலேயே முடிவு கட்ட இயலவில்லை.

மணமாகி ஓராண்டிலேயே சத்யன் தன் மனைவியைப் பறி கொடுத்தது பற்றி ஒரு சமயம் பரிதாபம் தோன்றியது.

ஆனால் அபீதா போன்ற பெண்களின் முயற்சிகளுக்குக் கதவு திறந்து வைத்தாற்போல ஆயிற்றே என்று வேதனையாகவும் இருந்தது.

தன்னிடம் எப்படி எப்படியோ நடந்து கொண்ட போதும் உயிருடன் இருந்த மனைவிக்கு சத்யன் துரோகம் செய்யவில்லை என்பதில் கொஞ்சம் திருப்தியும் உண்டா யிற்று.

கடைசியாக, சத்யனின் வாழ்வில் மீண்டும் தனக்கு ஓர் இடம் கிடைக்கக் கூடுமோ என்று தலை தூக்கிய ஆசையைக் குற்ற உணர்வுடன் அவசரமாக அடக்கினாள்.

ஒருவருடைய இறப்பில் தன் வாழ்வுக்கு வழி தேடுவதா?

சீச்சி! மனது எவ்வளவு கீழ் இறங்கிப் போய் விடு கிறது என்று தன்னையே கடிந்து கொண்டாள்.

ஆனாலும் இந்த ஓர் ஆண்டு கால வாழ்வுக்காகவா சத்யனுடைய தாயார் அவ்வளவு வேலை செய்தார்?

பிறர் அறியாமல் அவளைத் தேடி வந்து, மகள் வயதில் இருந்த அவளிடம் மண்டியிட்டு...

பாவம்! எல்லாமே வீண்!

ஆனால் ஒரேயடியாக வீண் என்று சொல்வதற்கும் இல்லையே.

மீனாட்சி அம்மாள் விரும்பியது போல அவர் களுடைய குடும்பத் தொழில் நன்றாகத்தான் நடைபெறு கிறது.

வெகு செழிப்பாகவே.

சத்யனுடைய சகோதரியின் திருமணம்கூட வெகு விமரிசையாகத்தான் நிறைவேறியிருக்கும்.

கல்பனா மட்டும் இறந்திராவிட்டால் அவனும் கூட நன்றாகத்தான் இருந்திருப்பான்.

''ஆல் இஸ் வெல் தட் என்ட்ஸ் வெல்'' என்பது போல் இடையிலே நடந்ததெல்லாம் மறைந்து, மறந்து எல்லோ ருடைய வாழ்க்கையும் நன்றாகத்தான் நடந்திருக்கும். மதுராவுடையது தவிர.

ஆனால் அவ்வளவு நல்லவராகத் தோற்றமளித்த மீனாட்சி அம்மாளுக்கு மருமகள் இறந்தபிறகுகூட மதுரா வின் நினைவு ஏன் வரவில்லை.

அல்லது அன்று அவர் சொன்னதுபோலத் தனக் காகவே அஞ்சி விட்டாரா?

ஒரு நாளும் மறந்திராத பழைய நினைவு அன்றும் இம்மி பிசகாது நினைவு வந்தது.

அவரது திட்டத்திற்கு மதுரா சம்மதம் தெரிவித்த பிறகு தயக்கத்துடன் கூறினாரே...

''கதைகளில் வருவது போல இதையெல்லாம் யாரிட மும் சொல்லக்கூடாது என்று உன்னிடம் நான் சத்தியம் செய்யப் போவது இல்லை...ஆனால்...'' என்று இழுத் தாரே.

அவர் கூறியது புரிந்தவளாய், ''நான் யாரிடமும் சொல்ல மாட்டேன், அம்மா,'' என்று உறுதி கூறினாள் மதுரா.

''அதல்ல மகளே. உன் மகிழ்ச்சியை எல்லாம் அழித்து விட்டு இன்னமும் உன்னிடம் எப்படிக் கேட்பது? ஆனால் என்றேனும் என் மகனுக்கு இது தெரிய நேர்ந்தால்... அவன் என்னை அடியோடு ஒதுக்கி விடக்கூடும். சமீபத் தில்தான் அவன் தந்தையை இழந்து அவனைச் சார்ந்து நான் இருக்க நேர்ந்திருக்கும் இந்த நேரத்தில்...'' மீண்டும் அவரால் முடிக்க முடியவில்லை.

''நான் அவருக்குத் தெரியவிட மாட்டேன், அம்மா'' என்றாள் மதுரா உறுதியோடு.

''வேண்டுமானால் சத்திய...'' என்றவளின் வாயைப் பொத்தித் தடுத்தார் தாயார்.

''உன்னிடம் எனக்கு முழு நம்பிக்கை இருக்கிறதம்மா. கூடவே இது வேறு யாருக்கும் தெரியாமல் மறைந்து போவது உனக்கும் நல்லதுதான். பின்னால் வேறு ஒரு வாழ்க்கை அமைகிற போது இதனால் தடை ஏதும் நேராது இருக்கும்'' என்றார்.

நிராசையான பார்வையை வேறு புறம் திருப்பினாள் மதுரா.

ஒருகணம் பேச்சிழந்து நின்றுவிட்டு மதுராவின் முகவாயைத் தொட்டுத் தன்புறம் திருப்பினாள் மீனாட்சி.

''மெய்தான் சொல்கிறேன் மகளே. எந்தவித துக்கமும் நாம் நினைக்கும் அளவுபெரிதல்ல, குழந்தாய். அவன் அப்பா இறந்த பிறகும் இன்னமும் நான் உயிரோடு இருக்கிறேன் பார்த்தாயா? மகன், மகள் என்று அவர்களின் நல்ல வாழ்வுக்காக என்றும் மறைந்தவரின் விருப்பத்துக்காக என்றும் சூழ்ச்சிகள் வேறு செய்து கொண்டு; கூடவே என்னுடைய நல்ல பெயருக்காக அதை மறைத்துக் கொண்டு...'' என்றார் அவர் கசந்த குரலில்.

தன்னுடைய செயலைப் பற்றி அவருக்கே வருத்தம் இருப்பதை உணர்ந்து; தன் துக்கத்தை ஒதுக்கி வைத்து விட்டு அவரைத் தேற்றினாள் மதுரா.

அது பழைய கதை.

ஆனால் அன்று அவர் சொன்ன அதே 'மகனைச் சார்ந்து வாழும் நிலை' இன்றும் தானே அவருக்கு இருக்கும்.

இப்போது மட்டும் உண்மையைக் கூறித் தன் நிலைமையைத் தாழ்த்திக் கொள்வாரா என்ன?

பின்னே மதுராவின் கதி?

ஒரு கசந்த சிரிப்புடன், ''மதுராவின்கதியை இத்தனை நாளும் போல அவளேதான் காத்துக்கொள்ளவேண்டும்.'' என்று சொல்லிக் கொண்டாள் அவள்.

எப்படி?

உடைந்த சன்னல் கதவு மனதை உறுத்த, தன் சேலை ஒன்றை எடுத்துத் திரையாக மாட்டி மறைத்தாள்.

நீச்சல் குளத்தை அடியோடு தவிர்க்க முடிவு செய்தாள்.

அறையில் இருந்த பெஞ்சியை கதவோரம் இழுத்துப் போட்டுக்கொண்டு இரவைக் கழிக்கவேண்டும்.

ஆனாலும் அவளறிந்த சத்யன். திருடனைப்போல மறுசாவி கொண்டு திறந்து இரவு நேரத்தில் உள்ளே வரக் கூடுமா?

திரும்பத்திரும்ப நம்ப மறுத்தது மனது.

வந்தே விட்டே பிறகு வரக்கூடுமா என்று சந்தேகம் என்ன வாழ்கிறது என்று எரிச்சலுடன் நினைத்தாள்.

ஏதோ நல்லவேளையாகக் காலைக் காபி வேலையை அபீதா எடுத்துக் கொண்டாள் என்று தோன்றியது.

ஆனால் அதிலும் ஆறுதல் அடைய முடியாமல் அவளையும் அவனையும் சேர்த்து நினைத்து வேதனை தான் மிச்சமாயிற்று.

வேதனையை விழுங்கிக் கொண்டு தன்னுடைய முடிவுகளை எல்லாம் செயலாற்றினாள்.

முக்கியமாக, சத்யன் எங்கே இருந்தாலும் எதிர்க் கோடியில் தான் இருக்குமாறு கவனித்துக்கொண்டாள்.

என்ன காரணமோ, சத்யனும் ஒதுங்கியே செல்லவும் அவளது எண்ணம் எளிதாகவே செயலாயிற்று.

அடங்கிவிட்ட எரிமலை போல ஏதோ ஒருவிதமான அமைதியில் மூன்று தினங்கள் கழிந்தன.

நான்காம் நாள் அதிகாலையில் மதுராவுக்கு ஒரு சின்ன சந்தோஷம்.

மனோகரன் ஓர் இரண்டு நிமிடம் அவளோடு பேசினான்.

அவளுடைய நலத்தை விசாரித்தான்.

தான் நன்றாக இருப்பதாகவும் வேலை மேல் 'கிரே'டுக்கு மாற்றியிருப்பதாகவும் சொன்னான்.

கூட வேலை செய்யும் ஒருவரிடம் கன்னடம் பயில்வ தாகக் கூறினான்.

கொஞ்சம் கொஞ்சம் பேச வருவதாகவும் கூறினான்.

அவன் குரலில் இருந்த உற்சாகம் அவளையும் தொற்றிக் கொள்ளச் சிறு முறுவலுடனேயே வேலை களைச் செய்தாள்.

முகத்தில் மலர்ச்சியுடன் மண்டியிட்டுப் பூச்சாடிகளை நிரப்பிக் கொண்டு இருந்தவள், சற்றுத் தொலைவில் இருந்து சத்யன் ஒருவிதமாய்ப் பார்த்துவிட்டுப் போன தைக்கூடக் கவனிக்கவில்லை.

உற்சாகத்தை மேலும் அதிகரிக்கச் செய்வதுபோல அன்று மதியமே சிவா வந்து சேர்ந்தான்.

கூடவே அலைந்தபடி, நொடிக் கொரு 'மதுரா ஆன்டி யுடன் அத்தை விட்டுக் கதைகளை எல்லாம் அளந்து முடித்தான்.

மாலையில் கட்டாயம் வருவதாகச் சொல்லி, அவனை ஆயாவுடன் அனுப்பி வைத்தாள்.

ஆனால் வேலை முடிகிற சமயத்தில், ''கடைசி காட்டேஜில் ஒரு டீட்டே கொண்டு வைத்துவிட்டுப் போ ஸ்பெஷல் டீ என்று சொல்லித் தனியாகப் போடச் சொல்லி வா.'' என்று உத்தரவிட்டுவிட்டுச் சென்றாள் அபீதா,

அபீதாவின் அதிகாரக் கட்டளைகளுக்குப் பணிவது என்றால் மதுராவுக்கு இன்னமும்கூடக் கஷ்டமாகத்தான் இருந்தது.

ஆனால் 'கேட்டரிங்' படித்து முடித்து, அதற்கு மேல் 'ஓட்டல் மானேஜ் மென்டில்' பட்டம் பெற்று அங்கே பெரிய பதவியில் இருப்பவள்.

மேலே இரண்டு தளங்களின் பொறுப்பை அவள் வகித் தாள்.

பெண் வேலையாட்கள் அவளது ஆணைக்குக் கீழ்ப் பட்டவர்கள்.

எனவே பணிந்துதான் ஆகவேண்டிய நிலைமை அவளுக்கு.

சுருக் சுருக்கென்று குண்டுசிக் குத்தல்களுடன் வரும் அதிகப்படி ஆணைகளையேனும் மறுக்க வேண்டும்போல இருக்கும் அவளுக்கு.

ஆனால் மறுத்தால் விதிமுறைகளை மீறியது என்று ஆகிவிடுமே. மேல் அதிகாரியை எதிர்ப்பது தப்புதானே.

அபீதா இவள் மீது குறை சொல்வது என்றாலும் இவள் அபீதா மேல் புகார் செய்வது என்றாலும் இரண் டுமே சத்யனிடம் சென்றாக வேண்டும்.

எந்தவகையிலும் சத்யன் முன் நிற்கும் நிலைவரக் கூடாது என்ற பிடிவாதத்தால் அபீதா என்னதான் ஓட ஓட விரட்டினாலும் உதாசீனமாய்ப் பேசினாலும் பல்லை இறுகக் கடித்துக் கொண்டு வேலை செய்தாள் மதுரா.

இப்போதும் ட்ரேயில் பிஸ்கட், கப்புகள் சாசர்கள், பால். சர்க்கரை, டீ ஜக்குகள் என்று அடுக்கும் போது கோபம் குமுறிக் கொண்டுதான் இருந்தது.

காட்டேஜ் வாசிகளுக்குப் பணிபுரியும் பொறுப்பு அவளுடையது அல்லவே.

ஆனாலும் ஓர் ஆறுதல்.

அங்கே சிவா, இருப்பான்; அருமையான குழந்தை அவனோடு பேசிக்கொண்டு இருந்தாலே களைப்பு பறந்து விடும்.

நித்யா வேறு வந்திருப்பதாகச் சொன்னான்.

அவளும் அன்பான பெண்.

அந்தஸ்து பாராமல் பழகும் அவளிடமும் சற்றுநேரம் பேசிச் சிரிக்கலாம்.

உற்சாகத்துடனேயே நடந்து சென்று காட்டேஜினுள் நுழைகையில் ஆறுதல், மகிழ்ச்சி எல்லாமே அற்ப ஆயுளில் மறைந்து போயின.

உள்ளே வாயிலுக்கு வெகு அருகாமையிலேயே அபீதா உட்கார்ந்து கொண்டிருந்தாள்.

வசதி படைத்த கஸ்டமர்களிடம் அல்வப்போது இனிமையே உருவாய்ப் பேசிக் கொண்டு இருப்பது அபீதாவுக்கு வழக்கம்தான்.

ஆனால் இருந்திருந்து இன்று பார்த்து இங்கே வந்து இருக்க வேண்டுமா?

இவள் முன்னே பேச்சாலது, சிரிப்பாவது?

உள்ளத்தின் சோர்வு உடலைத் தளரச் செய்ததோ?

வாயிலைத் தாண்டி உள்ளே செல்கையில் கால் இடறியது.

எவ்வளவோ முயன்றும் சமாளித்துக் கொள்ள முடியாமல் கையிலிருந்த ட்ரேயும் பாத்திரங்களும் டீபாயில் மோதி நொறுங்கி விழ அவளும் தொப்பெனக் கீழே விழுந்தாள்.

''அடேடே!'' என்று நித்யா எழுவது தெரிந்தது.

''ஆன்ட்டீ!'' என்று சிவா ஓடிவருவதும் தெரிந்தது,

இதையெல்லாம் மீறிக்கொண்டு அபீதாவின் உரத்த குரல் தீ மழை பொழிந்தது.

''கை, கால் நிதானம் இல்லாவிட்டால் சொல்லித் தொலைப்பதுதானே. சும்மா சும்மா பாரில் போய் நிற்பது ஏன் என்று இப்போதல்லவா நன்றாகத் தெரி கிறது சீச்சீ. மகாகேவலம். இந்தமாதிரி நாலு முட்டாள் கள் இருந்தால் இந்தப் 'பஞ்சவடி'யையே இழுத்து மூடி விட வேண்டியதுதான். இப்படியும் ஒரு பெண்ணா?சை!''

விழுந்த வேகத்தில் மதுராவுக்கு முழங்காலில் அடிபட் டிருந்தது.

உள்ளங்கையில் சிராய்த்திருந்தது.

இந்த வலியைவிடவும் மற்றவர் முன் கீழே விழுந்த கேவலத்தால் மனது துடித்தது.

இதைவிடவும் அபீதாவின் அநியாயமான குற்றச் சாட்டு வேதனையோடு ஆத்திரத்தையும் ஊட்ட மறுத்துப் பேச வாயைத் திறந்தாள்.

ஆனால் அதற்குள்ளாகப், ''போதும் அபீதா.'' என்ற சத்யனுடைய அழுத்தமான குரல்.

அவமானத்தால் உயிரே போய் விடும்போல ஆயிற்று அவளுக்கு.

12

சத்யன் எப்போது வந்தான்?

விழுந்த போதேயா?

இருந்திருந்து இந்த நேரம் பார்த்து இங்கே என்று எப்படி வந்தான்?

''அடிபட்டு விட்டதா?'' என்று கவலையுடன் கேட்ட படி அவள் எழுவதற்கு உதவி செய்த நித்யாவிடம், ,இல்லை, இல்லை' என்று முணுமுணுத்தபடி அவசரமாக எழுந்தாள்.

அவள் கையைப் பற்றி, ''வலிக்குதா, ஆண்ட்டி?'' என்று பரிவாக மொழிந்த சிறுவனிடம் பதில் சொல்ல முடியாமல் கண்களில் நீர் தளும்பத் தலையசைத்து வைத்தாள்.

ரத்தமெனச் சிவந்த முகத்தை மறைத்தபடி அவசர மாக வெளியே செல்ல முயன்றாள்.

ஆனால் அவ்வளவு எளிதாய் அவளைத் தப்ப விடுவ தாக இல்லை அபீதா.

''நில். பொட்டென்றுபோட்டு உடைத்துவிட்டு ஓடிப் போய்விட்டால், சுத்தம் செய்வது யார்?'' என்று முழங் கினாள்.

''சரி சரி. விடு அபீதா'' என்றான் சத்யன்.

''ஏதை விடுவது? இவள் இப்படியே போட்டுவிட்டுப் போகட்டும். சிவாக்கண்ணு அதில் மிதித்துக் காயம் பட்டுக்கொள்ளட்டும். என்கிறீர்களா?'' என்றாள் அபீதா ஆத்திரத்துடன்.

உதட்டைக் கடித்துக்கொண்டு. நொறுங்கிக் கிடந்த பீங்கான் துண்டுகளை அள்ளக் குனிந்தாள் மதுரா.

பொறுமையிழந்த ஒரு மூச்சுடன் சட்டென அவள் கையைப் பிடித்து தடுத்து நிறுத்தினான் சத்யன்.

''முட்டாள். என்ன செய்வதாக நினைப்பு. இன்னும் கையை வேறு வெட்டிக் கொள்ளவேண்டுமா? போய்ச் சந்திரம்மாவிடம் விஷயத்தைச் சொல்லி வேண்டிய உப கரணங்களோடு வந்து இதைச் சுத்தம் செய்யச் சொல். போ. முதலில் ரெட்டியிடம் கேட்டு ஏதாவது மருந்து வாங்கி அடிபட்ட இடத்தில் போடு. போ'' என்றான் அதட்டலாக.

குனிந்ததலை நிமிராமல், விட்டால் போதும் என்ற உணர்வுடன் வேகவேகமாய் ஒட்டமும் நடையுமாக அங்கிருந்து அகன்றாள் மதுரா.

சத்யன் சொன்னதுபோலச் சந்திரம்மாவை அனுப்பி விட்டு அவசரமாகத் தன் அறைக்குள் சென்று கதவைச் சாத்திக் கொண்டாள்.

ஒரு சின்ன சந்தோஷம்.

அதுகூடத் கடவுளுக்குப் பொறுக்கவில்லையா?

இவ்வளவு பெரிய தண்டனை கொடுக்க வேண்டுமா?

சிவாவும் நித்யாவும் அவளைப் பற்றி என்ன நினைப் பார்கள்?

சத்யனைப் பற்றியோ கேட்கவே வேண்டாம்.

அதிலும் அபீதா சொன்னதை எல்லாம் கேட்டபிறகு அடியோடு வெறுத்துப் போயிருக்குமே.

அவளும்தான் என்னவெல்லாம் சொல்லிவிட்டாள்.

'குடிகாரி' என்று வார்த்தையால் சொல்லவில்லை. அவ்வளவு தான்.

சும்மா சும்மா பாரில்போய் நிற்பதாகச்சொன்னாளே

அவளே சொல்லி அனுப்பியதால் ஒரே ஒருதரம் பெல்காப்டனை அழைக்க சென்றதுதவிர மதுராவாக அங்கே போனதே கிடையாதே.

என்ன அநியாயமாய்ப் பழி சுமத்துகிறாள்!

ஆனால் தனக்கும் தான் ஏன் நடையில் நிதானம் தவறிப் போகவேண்டும்.

கண்ணீர் பெருக்கியபடி குப்புறக் கிடந்த மதுரா சட்டென எழுந்து உட்கார்ந்தாள்.

அவளுக்கு நடையில் நிதானம் தவறவில்லை.

காலை எதுவோ இடறிற்று.

ஆனால் இடறுவதற்கு அங்கே எதுவுமே இல்லையே.

பின்னே...

சட்டென மதுராவுக்கு எல்லாம் புரிந்து போயிற்று.

டீ— அதுவும் ஸ்பெஷல் டீ கொண்டு வரச் சொன்ன தும், முன்னாலேயே சென்று வசதியாக வாயில் அருகே

அமர்ந்து கொண்டதும், வெளியே தெரியாமல் காலை இடறிவிட்டதும், குடிகாரி என்று குறிப்புக் காட்டிப் பேசுவதும்.....

எவ்வளவு சாமர்த்தியமாய் இந்த அபீதா சூழ்ச்சி செய்திருக்கிறாள்!

ஏன் இந்த வெறுப்பு?

ஒரு சின்னப் பையனும் அவனுடைய அத்தையும் இவளிடம் அன்பு காட்டுவதுகூட பொறுக்கவில்லையே.

இதையெல்லாம் யாரிடம் சொல்வது?

சொன்னால்தான் யாரும் நம்புவார்களா?

முக்கியமாக சத்யன்?

ஒருவழியாக முயன்று சென்று அவனிடம் சொன்னால் கூட ஓர் எழுத்து கூட நம்பமாட்டானே.

மீண்டும் பொங்கிக்கொண்டு வந்தது அழுகை.

ஆனால் பாரம் தீர அழக்கூட முடியாமல் அன்று செய்வதாக ஒத்துக்கொண்டிருந்த அதிகப்படி வேலை அழைத்தது.

முகத்தைக் கழுவி அழுதது தெரியாமல் லேசாகப் பவுடர் போட்டுச் சீர் செய்து கொண்டு சென்றாள்.

ஆனால் அன்றையக் கணக்கில் இன்னும் ஓர் அதிர்ச்சி காத்திருந்ததை அப்போது அலள் அறியவில்லை.

திரும்பவும் ரெட்டியிடம் சென்று ரிப்போர்ட் செய்து விட்டு மாலை வேலைகளைத் தொடங்கினாள்.

மேல்தளத்தில் ஓர் அறை காலியாயிற்று.

உடனடியாக வேறு ஆள் வருவதாகச் சொல்லவும் உறைகளையும் விரிப்புகளையும் மாற்றுவதற்காக அவசர மாகச் சென்றாள்.

வழியில் வந்து கொண்டிருந்த சத்யனை எதிர் கொள்ளும்படி ஆயிற்று,

''ஒரு நிமிடம்'' என்று நிறுத்தினான் அவன்.

அவளுடைய அலங்காரத்தை யோசனையோடு பார்த்துவிட்டு, ''மருந்து போட்டுக் கொண்டாயா?'' என்று வினவினான்.

பேசாமல் தலையை உருட்டிவிட்டுத் தொடர்ந்து சென்றாள் மதுரா.

அவன் அங்கேயே நிற்பது அறைக்குள் நுழைகையில் ஒரக்கண்ணில் பட்டது.

மருந்து போட்டாயா என்று அவன் கேட்ட்தே அர்த்தமற்ற ஆத்திரத்தைக் கிளப்பியது.

மனதை இவ்வளவு வேதனைப்பட வைத்துவிட்டுக் கேவலம், உடல் காயத்துக்கு மருந்து போடச் சொல்லு கிறான்.

என்ன கரிசனம்!

கோபமும் வருத்தமும் உள்ளுரப் போராட வேலை களைச் செய்யலானாள்.

வேலை முடிந்து அழுக்குத் துணிகளைச் சுருட்டி எடுத்துக்கொண்டு அவள் கிளம்பிய போதே அந்த அறை யில் தங்கவேண்டியவர்களின் சாமான்களோடு பெல் பாய் சுதீரன் உள்ளே வந்து கொண்டிருந்தான்.

ஒதுங்கி வழிவிட்டு, அவனுக்குப் பின்னே உள்ளே வந்து கொண்டிருந்தவனை ஏறிட்ட மதுராவுக்கு அன்று

இரண்டாம் முறையாக அவமானத்தில் உயிரே போய் விடும் போல ஆயிற்று.

ஏனெனில் உள்ளே வந்து கொண்டு இருந்தவன் வினோதன்.

முன் பிறவி போலத் தோன்றிய சென்னை வாழ்க்கை யில் அவளது அலுவலக மானேஜராக இருந்தவன்.

அதைவிட நெருங்கிய உறவுக்கு ஆசைப்பட்டவன்.

அவனை இந்த நிலையில் இங்கே பார்க்கும்படி ஆயிற்றே.

மதுராவின் ஏப்ரனையும், கையில் இருந்த அழுக்குத் துணிகளையும் கண்டு வினோதனும் பிரமித்துத்தான் போய் விட்டான்.

என்னவோ பெரிய வேலைக்குப் போவதாகச் சொன் னவள் அழுக்குத் துணி மூட்டையுடன் வெயிட்டராக நின்றால் வியப்பாய்ந்தான் இருக்கும்.

ஆனால் உலகம் இவ்வளவு சின்னதாக இருந்து அவனை அங்கே சந்திக்க நேர்ந்ததுதான் அநியாயமாய்த் தோன்றியது அவளுக்கு,

அப்போதைக்கு விலகிப் போய் விட்வும் வழி இல்லா மல் அவன் வாயிலிலேயே சிலையாய் நின்றிருந்தான்.

சாமான்களை வைத்து விட்டுத் திரும்பிய சுதீரனின் முன்னிலையில் அவன் ஏதேனும் சொல்லிவிடக் கூடாதே என்ற பயம் வேறு அவளை உந்திற்று.

''நீ...நீங்கள் வவருமுன் மாற்றி முடிக்க முமுடியாமல் போ போயிற்று...வந்து மமன்னித்துக் கொள்ளுங்கள் சா...ர்'' என்றாள் கண்களால் கெஞ்சியபடி.

வினோதன் சிலைக்கும் மெல்ல உயிர் வந்தது.

''ஓ...ஓகே ஓகே பபரவாயில்லை. அதனால் என்ன? பரவாயில்லை, பரவாயில்லை.'' என்று தானும் ஒருவாறு கூட்டி மெழுகி முடித்தான்.

ஆனால் அவள் வெளியே செல்ல முயலவும், ''ஒரு நிமிடம்.'' என்று தடுத்து நிறுத்தினான்.

சுதீரனும் சேர்ந்து திரும்பவும், ''வந்து...சலவைக்குத் துணிகள் இருக்கின்றன...அதனால் திரும்ப வரமுடியுமா?'' என்றான் அவளைப் பார்த்து.

மறுக்க இயலாமல், ''வருகிறேன் சார்.'' என்றாள் மதுரா.

''இப்போது ஒரு டின்னருக்குப் போகவேண்டும். ஒரு பத்து மணிக்கு வருகிறாயா?'' என்றான் வினோதன்.

பெல் பாய் கண்களை விரித்து சுவராசியத்துடன் கவனிப்பதைக் கண்டதும் மதுராவின் மனம் மேலும் சோர்ந்தது.

வெளியே காட்டிக் கொள்ளாமல், ''இரவில் சலவை அறையில் வேலை நடப்பது இல்லை சார். என் 'டியூடி' நேரமும் முடிந்துவிடும். அதனால் காலையில் வருகிறேன்.'' என்றாள் உணர்ச்சியற்ற குரலில் மதுரா.

அவனும் தன் தவறை உணர்ந்தவன் போல, ''ஒகே, ஓகே. காலையிலேயே வா. டின்னருக்கு அணிந்து செல்ல வேண்டிய துணிகளையும் சேர்த்து நாளையே தந்து விடுகிறேன். என்னப்பா, பெல் பாய், இந்தா.'' என்று சுதீரனிடம் டிப்சாக ஓர் ஐந்து ரூபாயை நீட்டினான்.

அப்போதைக்கு விடுபட்ட உணர்வுடன் அவசரமாக வெளியேறினாள் மதுரா.

ஆனால் அன்றைய சோதனைகள் அப்போதும் தீரவில்லை.

'லாபி'யில் சத்யன் நின்று காத்துக்கொண்டு இருந்தான்.

அவளுடைய முகச் சிவப்பையும், வேகமான மூச்சுகளையும் சில கணங்கள் கவனித்துவிட்டு, 'மருந்து போட வில்லையாமே, ஏன்?' என்று ஓர் வருத்தத்துடன் விசாரித்தான்.

என்ன மருந்து, ஏன் என்று ஒரு கணம் விழித்தாள் மதுரா.

உடனே நினைவு வர, ''காகாயம் ஒன்றுமில்லை...'' என்று சமாளித்தாள்.

ரெட்டியிடம் திரும்பிய சத்யன் இவளை 'சிக் ரூமுக்கு' அனுப்புங்கள், ரெட்டி. வேலையை முடித்து அனுப்பி விடுங்கள்...ஏன், இந்த நேரம் இவள் வேலை முடிந்திருக்க வேண்டுமே ஏன் அனுப்பவில்லை?'' என்று அவரிடம் வினவினான்.

''அ...அவளாகத்தான் எக்ஸ்டிரா வேலை செய்வதாகச் சொன்னாள்...'' என்று தன் மேல் குற்றமின்றிப் பார்த்துக் கொண்டார்!ரெட்டி.

உணர்ச்சியற்ற பார்வை மீண்டும் அவளைத் தாக்கித் திரும்ப, ''சரிதான் ஆனால் இப்போது அனுப்பி விடுங்கள்...முதலில் ''சிக் ரூமுக்கு'' என்று முடித்துவிட்டுப் போனான் சத்யன்.

நோயாளிகள் அறைக்குச் சென்று ஒரு ஏடி எஸ் ஏற்றிக் கொண்டு திரும்பினாள் மதுரா.

மறுநாள் காலையில் வினோதனிடம் என்ன சொல்வது?

பழைய காதலன் பிளாக் மெயில் செய்தான் என்று உண்மையைச் சொல்ல முடியாது.

பின்னே என்னவென்று சொல்வது?

எந்த அளவுக்குச் சொல்வது?

எதை விடுவது?

யோசனையோடு முதல் தடவை அவனது அறைக்குச் சென்ற போது அவன் குளித்துக் கொண்டு இருந்தான்.

அடுத்து, தயங்கித் தயங்கித் தள்ளிப் போட்டுக் கடைசியாக மீண்டும் அவள் அவனது அறையினுள் சென்ற போது அவனோடு சத்யனும் இன்னும் ஓர் அன்னியரும் உரையாடிக் கொண்டு இருக்கக் கண்டாள்.

சத்யனுடைய புருவம் உயரக் கண்டதும், "துணி எடுக்க வரச் சொன்னீர்களே, சார்." என்றாள் வினோதனை நேராகப் பார்த்து.

புரிந்து கொண்டவனாக, "ஓ...ஆ...ஆமாம், ஆமாம். மறந்தே விட்டேன். பிறகு வருகிறாயா?" என்று வினவினான் வினோதன்.

ஒருவாறு சமாளித்து விட்டான் என்ற நிம்மதியோடு வெளியேறினாள் மதுரா.

ஆனால் மீண்டும் வினோதனுடைய அறைக்கு மதுரா செல்லும்படியான வாய்ப்பு அதன் பிறகு கிட்டவே இல்லை.

ஏன், மேல்தளத்துக்குச் செல்லக்கூட அவளுக்கு முடியாது போயிற்று.

வேண்டும் என்றே அவள் தன்னைத் தவிர்ப்பதாக வினோதன் எண்ணிக் கொள்வானோ என்றுசற்று கவலை யாகக் கூட இருந்தது மதுராவுக்கு.

ஆனால் அபீதாவாகப் பார்த்து மேல் தள வேலைகளை ஏவினால் கூட ரெட்டி குறுக்கிட்டு மதுராவுக்கு வேறு

வேலைகளை இட்டுவிட்டு மேல் தளத்துக்கு ஆண்'வெயிட் டரையே அனுப்பி வைத்தார்.

முகம் சுளித்த அபீதாவின் காதுகளில் அவர் ஏதோ முணுமுணுக்க, அவள் முகம் மேலும் கடுப்பதை கவனித்த படியே ரெட்டி இட்ட வேலையைச் செய்யச் சென்றாள் மதுரா.

ஏன்?

கடைசியாக ரெட்டியின் ஆணைப்படி காட்டேஜ் ஒன்றில் வேலை முடித்துவிட்டு அவள் திரும்பி வந்தபோது மாலையாகிவிட்டிருந்தது.

இளம் பச்சை வண்ணப் புல்வெளியையும் செய்நீர் ஊற்றையும் பார்த்தபடியே வந்துகொண்டிருந்த போது வினோதன் அவளைச் சந்தித்தான்.

"வருவாய் வருவாய் என்று காத்திருந்து பார்த்தேன்' மதுரா. நீயாக வருவதாக இல்லையே" என்றான் குறை யோடு.

"இன்று கொஞ்சம் வேலை அதிகம்..."

"அதுதான் ஏன் என்று கேட்கிறேன், இந்த மாதிரி வேலை, அதிலும் அதிகப்படி வேலையை நீ ஏன் செய்ய வேண்டும்? நீயார் கேட்பதற்கு என்று சொல்ல மாட்டாய் என்று நினைக்கிறேன்" என்றான் வினோதன் வேகத் தோடு.

இந்த வேகத்தின் பின்னே வேதனை இருப்பது புரிந்த மதுரா மவுனமாகத் தலையசைத்தாள்,

"உன்னைப் பற்றி ஆபீசில் கேட்டால்கூடத் தப்பாகி விடுமோ என்று நினைத்தேன். ஆனால் நீ வருவேன் என்று சொல்லிவிட்டு ஏமாற்றுவாய் என்று நான் கொஞ்ச மும் எதிர்பார்க்கவில்லை. கடைசியாக உன்னைத் தேடிக் கண்டு பிடிக்க வேண்டியதாயிற்று.

மடமடவென்று பேசிக் கொண்டே போனான் வினோதன்.

ஒரு முடிவுக்கு வந்தவளாக, ''எனக்கு இப்போது வேலை முடிகிற நேரம். போய்ச் சொல்லிவிட்டு வந்து விடுகிறேன். நீங்கள்...அந்தச் செங்குன்றின் அருகே காத்திருங்கள், நான் இதோ வருகிறேன்'' என்று கூறி வேகமாகச் சென்றாள்.

''இன்று 'ஓவர்டைம்' செய்கிறாயா'' என்று கேட்ட ரெட்டியிடம் மறுத்து விட்டுத் திரும்பி வந்தாள்.

புல்தரையில் அமர்ந்தபடி, ''நீங்கள் இங்கே எப்படி வந்தீர்கள்?'' என்று வினவினாள் வினோதனிடம்.

''பஞ்சவடியை விஸ்தரிக்கப் போகிறார்களாமே. அது பற்றி நம் கம்பெனியோடு ஒரு 'டீல்'...ஆனால் அதைப் பற்றிப் பேச நாம் இங்கே வரவில்லையே.'' என்றான் வினோதன் வரண்ட குரலில்.

உதட்டைக் கடித்துக்கொண்டு பேசாதிருந்தாள் மதுரா.

ஒருகணம் காத்திருந்து விட்டு, ''சொல்லு, சென்னையில் அந்த மாதிரி வேலையை விட்டுவிட்டு ஏன் ஓடிவந்தாய்? இந்த வேலையில் அப்படி என்ன கவுரவம் கிடைத்து விட்டது? அப்படி என்ன சுகம்? சொல்லு...'' என்று படபடத்தான் அவன்.

ஒன்றும் சொல்ல முடியாமல், ''அதைப்பற்றிக் கேளாதீர்கள். சார்'' என்றாள் அவள் உணர்ச்சியற்ற குரலில்.

''நான் இன்னமும் உன் மானேஜர் அல்ல, இந்த சார் மோர் எல்லாம் போடுவதற்கு.'' என்று வெடித்தான் வினோதன்.

உடனேயே தணிந்து, ''கோபித்துக்கொண்டுப் போய் விடாதே, மதுரா. ஆனால் ஒரு பெரிய வேலையைவிட்டு இந்த வேலைக்காக—எந்த வேலையானாலும் பரவாயில்லை என்பதுபோல நீ ஓடிவரவேண்டும் என்றால்... என்மேல் உனக்கு அவ்வளவு வெறுப்பா? நான் ஏதேதோ நினைத்தேனே,'' என்றான் வருத்தத்துடன்.

''அப்படி ஒன்றும் இல்லை, சார்...இல்லை வினோதன் என்றாள் அவள் அவசரமாக.

ஆனால் அதற்குமேல் ஒன்றும் விளக்கம்கூற இயலாது. ''பாருங்கள் வினோதன், நான் இங்கே இந்த வேலை செய்யும்படியாக ஒரு நிலைமை ஏற்பட்டு விட்டது. இதன் காரணம் பழைய வேலையிலோ உங்கள்மீதோ உண்டான வெறுப்பு அல்ல. கூடவே இப்போது செய்யும் வேலை பிடித்திருக்கிறது என்பதும் இல்லை.'' என்று நிறுத்தினாள்.''

''பிறகென்ன? இதை விட்டுவிட்டு வந்துவிடு என்றான் வினோதன் அவசரமாக. ''சென்னைக்கு வந்துவிடு, மதுரா. அங்கே பழைய வேலை நீ செய்யவேண்டாம்.... என் வீட்டின் ராணியாக...''

''இல்லை. இல்லை.'' என்று கூறிவிட்டாள் மதுரா. ''தயவு செய்து இப்படியெல்லாம் பேசாதீர்கள்'' என்றாள் பதட்டத்துடனேயே.

''மதுரா...''

''தயவு செய்து சார்...வினோதன்...'' என்றாள் மதுரா இறைஞ்சுவதுபோல.

சற்று நேரம் அவளை வெறித்துப்பார்த்தான் அவன். ஒரு பெருமூச்சுடன், ''ஓகே. உன் விருப்பம். ஆனால் இங்கேயும் நீ மகிழ்ச்சியாக—ஏன் நிம்மதியாகக் கூட

இருப்பதாகத் தெரியவில்லையே, அதுதான் என் வருத்தம். போகட்டும். ஆனால் என்றேனும் உனக்கு ஓர் உதவி— ஒரு துணை தேவை என்கிற நிலை ஏற்பட்டால் என் நினைவு இருக்கட்டும்...நான் வந்த வேலை மதியமே முடிந்துவிட்டது. மற்றபடியும் இனித் தாமதிப்பதில் அர்த்தம் இல்லை ... நிச்சயமாகவே இல்லைதானா மதுரா?" என்று கூறி நம்பிக்கையற்ற ஓர் ஆவலுடன் அவளை நோக்கினான் வினோதன்.

பேச முடியாமல் ஆனால் உறுதியோடு தலையசைத்தாள் மதுரா.

"சரிதான். நான் கிளம்புகிறேன். இப்போதே காலி செய்து விடுவேன். ஆனால் நான் ஒருவன் இருப்பது மட்டும் எப்போதும் நினைவு இருக்கட்டும்." என்று எழுந்து கையை நீட்டினான்,

தயக்கத்துடன் மதுரா தன் கையை நீட்டவும், அவள் கரத்தைப் பற்றி அழுத்திவிட்டுச் சென்று விட்டான்.

இவன் நல்லவன்.

இவனிடம் நம்பிச் சொல்லலாம்.

பெரும் தொகையே என்றாலும் அதையும் கொடுத்து விடுதலையை அவனே வாங்கித் தரவும் கூடும்.

ஆனால் அந்த விடுதலைக்கும் ஒரு விலை உண்டே; அதைக் கொடுப்பது முடிகிற காரியம் இல்லையே.

"குலைத் இஞ்சினீயருக்குப் பிறகு வந்த வரிசையில் இவன்தான் கடைசியா?"

தூக்கிலாரிப் போட்டுக் கொண்டு திரும்பினாள் மதுரா.

ஓர் இகழ்ச்சியான பார்வையுடன் அங்கே நின்றிருந்தவன் சத்யன்தான்.

13

கோபமும் ஆத்திரமுமாக, முடிந்தால் கடித்துக் குதறி விடுவான் போல அங்கே நின்று கொண்டு இருந்தவன் சத்யனேதான்.

"வந்து தங்குகிற ஆண்களோடு எல்லாம் சரசமாட இது அந்த மாதிரி ஓட்டல் இல்லை. அந்த வேலை செய்ய பங்களூரில் வேறு இடத்துக்குப் போகவேண்டும்." என்றான் குரூரத்துடன்.

"சத்யன்!" என்றாள் மதுரா திகைத்துப்போய்.

"என்ன ஆச்சரியம்! என் பெயர்கூட நினைவு இருக்கிறதே! வலையில் சிக்கியவர்கள் பெயரை எல்லாம் மறக்காமல் டைரியில் எழுதிவைத்திருக்கிறாயா?" என்றான் குத்தலாக.

உடனேயே ஆறடிக்குமாக நிமிர்ந்து, "ஆனால் நான் இப்போது உன் முதலாளி. என்னிடம் வேலை செய்யும் போது ஒழுக்கக் கேட்டை நான் அனுமதிக்க மாட்டேன்." என்றான் அதிகாரமாக.

என்ன அநியாயம்!

இவன் இன்னொரு பெண்ணை மணந்து ஹனிமூன் கொண்டாடி சுகித்திருந்த போதும் கூடக் கன்னிவிரதம் காத்தவளிடம் என்ன பேச்சு பேசுகிறான்!

அவளுக்கும் ஆத்திரம் உண்டாக, "வேலை நேரம் தவிர மற்றபடி என்வாழ்வை நான் எப்படிக் கழித்தாலும் அது பற்றிப் பேச உங்களுக்கு அதிகாரம் இல்லை," என்று வெடுக்கென மொழிந்தாள்.

சட்டெனத் திரும்பி நடக்கத் தொடங்கினாள்.

''எனக்கா அதிகாரம் இல்லை?'' என்று சினத்துடன் அவள் கரத்தைப் பற்றி நிறுத்தினான் அவன்.

கண்களில் வெறியுடன், ''நான் நினைத்தால்...'' என்று தொடங்கியவன், சுற்றுப்புறத்தை உணர்ந்தவனாக 'சை' என்று அவளை உதறிச் சென்று விட்டான்.

அவன் உதறிய வேகத்தில் தொப்பென்று தரையில் அமர்ந்த மதுரா எழுவதற்குச் சக்தியற்றாற் போலத் தொய்ந்தாள்.

'நான் நினைத்தால்' என்றானே, நினைத்தால் எதுவும் செய்வேன் என்கிறானா?

என்ன செய்வதாக பயமுறுத்துகிறான்?

என்ன செய்துவிட முடியும் என்று ஒரு கணம் நினைத்தாலும் அவனாக முயன்றால் என்ன செய்ய முடியாது என்றும் மனம் தளர்ந்து போனாள்.

அவரவர் பிரச்சினையில் மூழ்கியிருந்த சத்யனாகட்டும், மதுராவாகட்டும்—இருவருமே வெகு ஆவலுடன் தங்களைக் கவனித்துக் கொண்டிருந்த நித்யாவைக் காணவில்லை.

மதுரா தன் பழைய தீர்மானங்களை வெகு கவனத்துடன் செயல்படுத்தினாள்.

ஆனால் அவள் எவ்வளவுதான் எச்சரிக்கையுடன் நடந்து கொண்ட போதும் அவளுடைய முயற்சிகளுக்கு ஓர் எல்லை—ஒரு வரையறுக்கப்பட்ட நிலை இருந்தது.

எல்லை மீற வேண்டும் என்று எண்ணியிருந்தவன் அந்த எல்லையை மீறவும் முடிந்தது.

சத்யன் கீழ்த்தளத்தில் இருந்த அலுவலகத்துக்குச் சென்றபிறகுதான் அவனதுஅறையில் மதுரா வேலையைத் தொடங்குவாள்.

அன்றும் அவ்வாறே செய்து கொண்டு இருந்தபோது கதவைத் திறந்து கொண்டு சத்யன் உள்ளே வந்தான்.

உள்ளப் படபடப்பை மறைத்துக் கொண்டு தன் வேலையிலேயே கவனம் போலப் படுக்கை விரிப்பை மடித்து மெத்தையின் கீழ் சொருகினாள் மதுரா.

சத்யனுடைய அறை என்பது மூன்று அறைகள் கொண்ட 'ஸூட்'. உட்காரும் அறை, பாத்ரூம் வசதியோடு கொண்ட படுக்கை அறை, வெளிப்புறம் நோக்கிய இன்னும் ஓர் அறை என்று மூன்று அறைகள் இருந்தன.

கதவைத் திறந்ததும் எதிர்ப்படும் உட்காரும் அறையைக் கடந்து படுக்கை அறையின் வாயிலில் வந்து நின்று சற்று நேரம் அவள் வேலைசெய்வதையே பார்த்துக் கொண்டிருந்தான்.

தலையணைகளுக்கு வேகமாக உறையிட்டு, உரிய இடத்தில் வைக்கத் தொடங்கினாள் மதுரா.

திடீரென்று ''வேலை கஷ்டமாக இருக்கிறதா?'' என்றான் சத்யன்.

உள்ளூரத் திகைப்புடன், ''இல்லை'' என்று தலையசைத்தாள் அவள்.

''ஆனால் தகுதிக்குக் குறைவான வேலை செய்ய வேண்டியிருக்கிறதே என்ற வருத்தம் இருக்கத்தான் செய்கிறது, இல்லையா?''

இந்த வேலையைத் தண்டனையாகக் கொடுத்தவனே இப்படிக் கேட்டால் என்னவென்று பதில் சொல்வது?

பேசாமல் தலை நிமிராமல் வேலையில் ஈடுபட்டாள்.

இரண்டு எட்டு உள்ளே வந்து, ''கேட்கிறேன்.'' என்றான் அவன் ஓர் அழுத்தத்துடன்.

வேலையைச் செய்தபடியே, ''வருத்தப்பட வேண்டும் என்று தானே இந்த வேலையைச் செய்யச் சொன்னீர்கள்?'' என்று திருப்பினாள் அவள்.

''கரெக்ட்'' என்றான் அவன் திருப்தியுற்ற குரலில்.

தொடர்ந்து, ''ஆனால் இதைச் செய்துதான் கடனைத் தீர்த்தாக வேண்டும் என்பதும் இல்லை'' என்றான் ஒரு மாதிரிக் குரலில்.

வயிற்றினுள் ஏதோ பிசைய கலக்கத்துடன் அவனை ஏறிட்டுப் பார்த்தாள் மதுரா.

''புரிகிறது இல்லையா? இவ்வளவு அழகை வைத்துக் கொண்டு இந்த வேலையெல்லாம் ஏன் செய்ய வேண்டும். செய்கிற வேலையைச் சுகமாக இங்கே செய்யலாமே.'' என்று படுக்கையைச் சுட்டி விட்டு நெருங்கி வந்து அவள் தோளைத் தொட்டான் சத்யன்.

உள்ளங்கை எரிந்த போதுதான் அவனை அறைந்து விட்டோம் என்பதுகூட அவளுக்குப் புரிந்தது.

என்ன தவறு!

ஆனால் என்ன பேச்சு பேசிவிட்டான்!

சட்டெனக் கண்ணீர் அடக்க மாட்டாமல் பொங்கியது.

அதை அவனுக்குக் காட்ட மனமின்றி சன்னல் புறம் திரும்பினாள்.

சற்று நேரம் அவனும்கூட ஏதும் பேசவில்லை.

பிறகு, ''பத்தினி வேடமெல்லாம் பிரமாதமாய்த் தான் இருக்கிறது.'' என்றான் ஏளனமாக.

வேடம் அல்ல; உண்மைதான் என்று கதறியது அவள் மனம்.

ஆனால் இன்றிருக்கும் நிலையில் அவள் சொன்னால் கூட அவன் நம்புவானா?

நம்பினாலும் தன்னை நம்பிய ஒரு தாயை எப்படிக் குற்றம் சாட்டுவது?

அதைவிட உடம்பு நொந்தாலும் முதுகு ஒடிந்தாலும் கூட பரவாயில்லை.

மடமடவென்று உதிர்ந்த கண்ணீரை அடக்க முயன்றபடி, ''என்னை பழைய வேலைக்கே மாற்றிவிடுங்கள்.'' என்றாள் தொண்டை அடைக்க.

சட்டென அவளைப் பற்றித் திருப்பினான் சத்யன்.

வெள்ளமாய்ப் பெருகிய கண்ணீரைக் கண்டதும், ''அடிப்பதும் அடித்துவிட்டு அழ வேறு செய்கிறாயா?'' என்றான்.

மறுகணம் அவளை மார்போடு இறுக அணைத்துக் கொண்டான்.

''சொல்லு, ஏன் அப்படிச் செய்தாய்? ஏன்? என்னை விட உனக்குப் பணம் அவ்வளவு பெரிதாகிப் போயிற்றா? நான்...என்...மனம்...இந்த அணைப்பு...''

விலகத் தோன்றாமல் அவள் நிற்க, வார்த்தைக்கு வார்த்தை அவனது அணைப்பு இறுக மேலே என்ன நடந்திருக்குமோ?

ஆனால் கதவைத் தட்டும் ஒலியும் ஓர் இளங்குரலும் இருவரையும் இந்த உலகுக்கு இழுத்து வந்தன.

சட்டென அவளை விட்டு விலகி முன் அறைக்குச் சென்றான் சத்யன்.

''அப்பா, இன்னைக்கு சாங்காலம் ஸ்ஸ்...ஸிம்மிங் வரீங்களாப்பா?'' என்று வினவியபடி உள்ளே வந்தான் சிவா.

மீண்டும் காலின் கீழ் பூமி நழுவியது மதுராவுக்கு. சிவா. சத்யனுடைய மகனா?

அந்தச் சிறுவனிடம் அவ்வளவு பாசம் ஏன் வந்தது என்று அப்போது புரிந்தது.

உடம்பெல்லாம் புல்லரிக்க நேர்விரோதமாய் உள்ளத்தை ஏக்கம் வெகுவாக அரித்தது.

அதற்குள் அவளைப் பார்த்துவிட்டு, "ஐ, மதுரா ஆன்ட்டி!" என்று உள்ளே ஓடி வந்தான் சிறுவன்.

சிவாவைச் சத்யனுடைய மகனாகக் கண்ட திகைப்பில் தன் கண்ணீரை மதுரா மறந்து போனாள்.

ஆனால் அதைக் கண்டு விட்ட சிவா, "அன்னைக்கு விழுந்தது இன்னும் வலிக்குதா, ஆன்ட்டி?" என்று பரிவுடன் விசாரித்தான்.

அவள் கையைப் பற்றி, "இதோ பாருங்க, நான் கிஸ் பண்றேன்; உடனே வலியெல்லாம் பறந்து போயிரும்." என்று கையில் மெத்தென்று முத்தமிட்டான்.

உடனே நிமிர்ந்து, "வலி போயிட்டுதா?" என்று கனகவலையுடன் விசாரித்தான்.

கண்ணீரும் புன்னகையும் போட்டி போட்டுக் கொண்டு வர. அவனைத் தூக்கி, "ஆமாமடா, கண்ணா." என்று அவனது குண்டுக் கன்னத்தில் முத்தமிட்டாள் மதுரா.

"அப்போ இன்னிக்கும் சாய்ங்காலம் வரீங்களா?" என்று அழைத்தவன் யோசித்து, "அப்புறம் நம்ம எலலாம் அப்பாகூட 'ஸ்விம்மிங்' போலாம்" என்றான்.

'நான்...நான்..." என்று தடுமாறினாள் மதுரா.

"வருவாள், வருவாள்.. நீ இப்போது ஆயாவுடன போ." என்றான் சத்யன் மகனிடம்.

தந்தைக்குப் பணிந்து கதவுவரை சென்றவன் நின்று, "அப்பா, நீங்க..." என்று கெஞ்சலாக இழுத்தான்.

"தானும் தான்" என்று கூடவே சென்று "ஆயா, சிவாவை விளையாட்டு அறைக்கு அழைத்துப் போ." என்று அனுப்பி விட்டுத் திரும்பி வந்தான்.

ஒருவாறு தன்னை நிதானப்படுத்திக் கொண்டு மதுராவும் கிளம்பினாள்.

அவளையேபார்த்தபடி நின்றிருந்தவன், திடீரென்று, "இந்தக் குழந்தை உன்னுடையதாக இருந்திருக்கும்— அதாவதாக நம்முடையதாக." என்றான்.

சும்மாவே பெரிதாக உணர்ந்த இழப்பு பூதாகாரமாக உருவெடுக்க, "சத்யன், ப்ளீஸ்..." என்றாள் அவள் மன்றாடலாக.

"ப்ளீஸ் என்ன? தயவு செய்து எனக்கும் ஒரு குழந்தையைத் தாருங்கள் என்கிறாயா?" என்றான் அவன் குரூரத்துடன்.

முகத்தில் அறை விழுந்தாற் போலக் கையில் இருந்த தலைகளைப் போட்டு விட்டு ஓட முயன்றாள் மதுரா.

அவளுக்கு முன்பாகக் கதவை எட்டியவன், அவள் கையைப் பற்றி நிறுத்தி, "நான் எப்போதும் தயாரடி, பிளடிபிச், நீ எவ்வளவுதான் மோசக்காரி என்று தெரிந்த பிறகும் உன் உடம்பு கிளர்ச்சி ஊட்டுவதாகத் தானடி இருக்கிறது." என்றான் சினமும் வெறுப்புமாக.

விடுபட முயன்றபடி ஒரு கையை நீட்டிக் கதவைத் திறந்தாள் அவள்.

ஆனால் அவளை இலகுவாகப் பற்றிக் குனிந்து அவள் இதழ்களைத் தன் உதடுகளால் அழுந்த மூடினான் அவன்.

அவள் தடுமாறும் போதே விலகி கதவை நன்றாகத் திறந்து கொண்டு வெளியே சென்று விட்டான்.

அவனுக்கு மட்டுமா அவளுடைய உடம்பு கிளர்ச்சி ஊட்டுவதாக இருக்கிறது!

பெண்ணென்றாலும் அவளும் உயிரும் உணர்வும் கொண்ட மனிதப் பிறவிதானே.

அவனுடைய இந்தத் தாக்குதலை அவளால் எத்தனை நாள் எதிர்க்க முடியும்?

ஏன், இன்றுகூடச் சமயத்தில் சிவா வந்திரா விட்டால்...

மோசக்காரி என்ற எண்ணமும் அதனால் வந்த வெறுப்பும் உள்ளவரையில் திருமணம் என்னும் புனித மானஉறவை அவன் அவளுக்கு அளிக்கப்போவது இல்லை.

கூடவே அவளைப் பழிவாங்கும் வெறியுடன் மோக மும் சேர்ந்து கொள்ள அவனைக் கேவலம் ஓர் ஆசை நாயகியாக வைத்துக் கொள்ள நினைக்கிறான்.

என்ன அநியாயம் என்று ஆத்திரம் ஒருபுறம் கனன்ற போதும் அடனை அவளாலும் வெறுக்க முடியவில்லை.

. முன்போல ஒதுங்கிப் போய்விடலாம் என்றாலோ, அவனுடைய பழி வெறி அதை அனுமதிக்கப் போவது இல்லை.

ஆனால் என்றேனும் அவனுடைய எண்ணம்—வன்மம் நிறையவேறிப் போனால் பிறகு அவள் உயிரோடு இருக்கக் கூடுமா?

முடியவே முடியாது.

சுற்றுப்புறம், சூழ்நிலை எதையும் உணராமல் நடந்து கொண்டு இருந்தவளைத் திடீரென்று ஒரு கரம் பற்றியது.

பதறிப் போய்ப் பார்த்தாள் மதுரா.

14

அனிச்சைச் செயலாய்க் கையை உதறி விடுவித்துக் கொண்டு நிமிர்ந்தாள் மதுரா.

அந்தத் 'தடவைக்கொரு மனைவி'க்காரன்!

எப்போது வந்தான்?

வந்தவன் ஏன் அவள் கையைப் பிடித்தான்?

மற்றொரு சமயமானால் 'என்ன தைரியம்' என்று சினந்து விழித்திருக்கக் கூடியவள்; எட்டிக் கன்னம் பழுக்க அறைந்திருக்கவும் கூடியவள் இன்று நிலைகுலைந்து போயிருந்ததால் வெறுமனே மருண்டு விழித்தாள்.

''அறையில் தண்ணீர் இல்லை.'' என்று புன்னகை செய்தான் அவன்.

காலையில் அவளே எடுத்து வைத்தது தானே என்ற நினைவு வரவில்லை.

''ஓ...இதோ.'' என்றவள் அவனோடு அறையினுள் சென்று மினி ஃபிரிஜ்ஜில் இருந்த தண்ணீர் பாட்டிலை எடுத்தாள்.

உள்ளே இருந்த பெண் ஒளிவு மறைவில் நம்பிக்கை இல்லாதவள் போலும்.

உள்ளாடை இல்லாமல் தொள தொளப்பாக வலைப் பின்னல் அங்கி மட்டுமே அணிந்திருந்தாள்.

அவன் உள்ளே வரவும் அவன் அருகே சென்று சாய்ந்தாள்.

அவளது இடையை வருடியபடியே மதுராவை வெறித்தான் அவன்.

தன் போக்கில் பாட்டிலுடன் வந்தவள் வழியில் இருவரும் நிற்கவும், நின்று நிமிர்ந்தாள்.

அவர்கள் இருவரும் நின்ற நிலையைக் கண்டு உடம்பு கூசி முகம் கன்றியது.

அதுவரை மரத்துப் போயிருந்த சுரணையும் ஒருவாறு திரும்பியது.

முகம் கருக்கச் சட்டெனப் பார்வையை அகற்றிக் கொண்டு வேகமாய் வெளியேறினாள்.

மான ஈனம் இல்லாத பிறவி என்று உள்ளூர அந்தப் பெண்ணைச்சபித்தாள்.

உடனேயே சத்யன் இதே நிலைக்கு அவளைத் தாழ்த்த முயல்வது நினைவு வந்தது.

இல்லை. ஒருக்காலும் நடவாத காரியம்.

இன்னமும் இதிலிருந்து மீள வழி கிடைத்தே தீரும்!

தண்ணீரை அடுத்த வெயிட்டர் மூலம் அனுப்பி வைத்தாள்.

அவனிடம் பேச்சுக் கொடுத்தபடியே உடன் அழைத்துச் சென்று சத்யனுடைய அறையில் கிடந்த அழுக்குத் துணிகளை எடுத்து வந்தாள்.

அடுத்து, ரெட்டி இருக்க வேண்டுமே என்று வேண்டிய படியே சென்றபோது அதிருஷ்டம் அவள் பக்கம் இல்லை.

வேறு வழியின்றி அபீதாவை நெருங்கி, ஒரு மணி நேரம் விடுப்பு கேட்டாள்.

சற்று நேரம் பேசாமல் மதுராவைப் பார்வையால் அளந்தாள் அபீதா.

கலைந்திருந்த கூந்தலும் கன்றியிருந்த முகமும் அவளுக்கு எதை உணர்த்தினவோ.

சட்டென முகம் கடுக்க, "சும்மா சும்மா விடுப்பு லீவு என்றால் எப்படி? உன்னை அதிகப்படியாக ஓவர் டைம் வேலை செய்ய விடக்கூடாது என்று வேறு உத்திரவு" என்றாள் சினத்துடன்.

"யார்? யாருடைய உத்திரவு?" என்று புரியாமல் கேட்டாள் மதுரா.

"ஆகாகா! புரியாதது போல என்ன நடிப்பு!" என்றாள் அபீதா எகத்தாளமாக. 'பெரிய புளியங்கொம்பு தேடுகிறாயாக்கும்! ஏன், அந்த ராம்நாத் திரும்பி வந்திருக்கிறானே, அவனிடம் முயன்று பார்ப்பதுதானே."

"அபீதா!" என்றாள் மதுரா அதட்டலாக.

மற்றவளுக்கு உட்னே ஆங்காரம் பொங்கியது.

"மேடம் என்று சொல்லடி. எவ்வளவு திமிர் இருந்தால் என்னைப் பெயர் சொல்லி அழைப்பாய்? சாதாரண ஸ்வீப்பராக இருந்து வெயிட்டர் ஆனவள். என்னைப் பெயர் சொல்லி அழைக்கிறாயா? இதற்கே பத்து நாள் சம்பளத்தைக் 'கட்' பண்ணுவேன். என்னவென்று நினைத்துக் கொண்டாய்." என்று சுத்தினாள்.

நிலைமை மறந்தது தவறுதான்.

கூடவே அங்கங்கே சென்றவர்கள் நின்று திரும்பிப் பார்ப்பதும் அவமானமாய் இருந்தது.

"சாரி மேடம்" என்று கூறி நகர்ந்தாள் மதுரா.

ஆனால் உடனேயே ஒரு பேப்பரில் ஒரு மணி நேரம் விடுப்பு வேண்டும் என்று எழுதிக் கொணர்ந்தாள்.

நல்ல வேளையாக ரெட்டியும் திரும்பி வந்திருக்கவே பொதுவாக மேசை மேல் வைத்துவிட்டுச் சென்றாள்.

அபீதா ஏதோ பேசத் தொடங்கியதைக் கேளாதது போல அகன்று விட்டாள்.

நேரே சென்று நித்யாவின் காட்டேஜை அடைந்தாள்.

'ஏர்மெயில்' கவர் ஒன்றிலிருந்து கடிதத்தை எடுத்துப் படித்துக் கொண்டு இருந்தாள் நித்யா.

மதுராவைக் கண்டதும் உற்சாகத்துடன் வர வேற்றாள்.

''வாருங்கள் மதுரா, உட்காருங்கள், என்ன குடிக் கிறீர்கள்? ஜூஸ், காபி.. அல்லது டீ?'' என்று கண் சிமிட்டினாள்.

அன்று போட்டு உடைத்த நிகழ்ச்சியை எண்ணி மதுரா முகம் சிவக்க, நித்யா சிரித்தாள்.

பிறகு, ''தவறுவது இயற்கைதானே, மதுரா, ஒரு சின்ன விஷயத்துக்குப் போய் இப்படி மனதை வாட்டிக் கொள்கிறீர்களே சொல்லுங்கள். கொஞ்சம் ஆப்பிள் சாறு குடிக்கலாமா?'' என்றவள் உள்ளே அழைத்து அதைக் கொண்டுவரச் சொன்னாள்.

''சிவா சொன்னதை வைத்து நீங்கள் மாலையில்தான் வருவீர்கள் என்று நினைத்தேன். ஆனால் சந்தோஷமான 'சர்ப்ரைஸ்' என்று மதுராவின் முகத்தைக் கூர்ந்து பார்த் தாள்.

தனக்காக சத்யன் பதில் சொன்னது நினைவு வந்தது மதுராவுக்கு.

சிவா தன் அறியாப் பிள்ளைத் தனத்தோடு என் னென்ன சொன்னானோ?

குறைந்தது சத்யனும் அவளும் அங்கே தனித்திருந்தது பற்றிச் சொல்லியிருப்பான் அல்லவா?

அவள் திணறிக் கொண்டு இருக்கையிலேயே பழச் சாறு வந்தது.

ஒன்றை எடுத்து மதுராவிடம் அளித்துவிட்டு, ''சொல் லுங்கள் மதுரா, என்ன விஷயம்? உங்கள் எம்.டி.க்கு இன்னமும் உங்கள் தகுதி தெரியவில்லையா?'' என்றாள் நித்யா குறும்பாக.

முகம் மேலும் கன்ற, ''எம்.டி. உங்கள் அண்ணன் என்று தெரியாமல் ஏதேதோ உளறி விட்டேன் சாரி.'' என்றாள் மதுரா எழும்பாத குரலில்.

''இப்போது 'சாரி'க்கு என்ன அவசியம்? மெய்யாகவே அண்ணனுக்கு உங்கள் தகுதி தெரியவில்லை தானே.'' என்றாள் நித்யா.

அந்த வார்த்தைகளில் உள்ள உண்மையை எண்ணி மதுராவின் முகம் வாடியது.

பேச்சை மாற்றுவதற்காக, ''நீங்கள் உங்கள் அண்ண னின் அறைகளிலேயே தங்கலாம். இங்கே தனியாக ஏன்?'' என்று விசாரித்தாள்.

''ஓ! உங்களுக்குத் தெரியாதா, மதுரா? இது எங்கள் அம்மாவின் காட்டேஜ். சுமார் ஐந்து ஆண்டுகளுக்கு முன்பாக அப்பா அம்மாவுக்காகவே கட்டியது. அப்போது தான் 'பஞ்சவடி காம்ப்ளெக்ஸ்' முழுவதையும் பெரிதாக விஸ்தரித்தார்கள். காட்டேஜ்கள், நீச்சல் குளம், நட்சத்திரத் தகுதி என்று. ஆனால் அம்மா அப்பா மட்டும் வசிப்பதற்கு என்று இந்தப் பகுதி. அப்பாவுக்குப் பிறகும் அம்மா இதிலிருந்து அசையவே இல்லை. இப்போதுதான் என் மாமா அத்தையுடன் பிடிவாதமாய் அனுப்பி வைத்தோம்....''என்று விளக்கினாள் நித்யா.

ஒரு சாதாரணப் பணியாளிடம் ஏன் இதையெல்லாம் சொல்கிறாள் என்ற எண்ணம் தோன்றுமுன் மறைந்தது.

இருந்திருந்து இப்போது பார்த்துத்தானா அனுப்ப வேண்டும்? இத்தனை நாள் இங்கிருந்து அசையாதவர் இப்போது என்று வெளியூர்கூட அல்ல—வெளிநாட்டுக்கே செல்வது என்றால் மதுராவின் வாழ்வு முடிவது என்பது தான் விதியா?...

''என்ன விஷயம், மதுரா?'' என்று மிருதுவாகக் கேட்டாள் நித்யா.

எண்ண ஓட்டம் தடைப்படத் திடுக்கிட்டு நிமிர்ந்தாள் மதுரா.

நித்யாவின் கூரிய பார்வை அவளைத் துளைத்தது.

நெஞ்சை ஊடுருவது போல அவளுடைய அண்ணனின் கண்கள்.

ஆனால் அந்த அண்ணன் அவளை அறிந்து கொள்ள வில்லையே.

துயரம் நெஞ்சை அடைத்தது.

இவள் என்ன எண்ணக்கூடும் என்று உள்ளூரக் கலங்கியபடியே, ''எனக்கு உங்கள் அம்மாவின் முகவரி வேண்டும்.'' என்றாள் மெல்லிய குரலில்.

''ஏன்?!'' என்றாள் நித்யா ஆச்சரியத்துடன்.

இரண்டே எழுத்தில் சின்னக் கேள்விதான்.

ஆனால் இதற்கு என்னவென்று பதில் சொல்வது?

என் வாழ்க்கைப் பாதையை திசை திருப்பியவர் உன் தாயார்; படுகுழியை நாடிச் சென்று கொண்டிருக்கும் அதைக் காப்பாற்றக் கூடியவரும் அவரேதான். அதனால் தான் கேட்கிறேன் என்பதா?

இப்போதுகூட மீனாட்சி அம்மாள் வந்து உண்மையைக் கூறித் தனக்கு இனிய வாழ்வைத் தந்து விடுவார் என்று அவள் எதிர்பார்த்து வீடவில்லை.

தாய் என்ற அதிகாரத்தைப் பயன்படுத்தி, அவருடைய மகன் பிடியிலிருந்து அவளை விடுவித்தாலே போதுமே.

ஆனால் இதையெல்லாம் கள்ளமற்று நகைபுரியும் இவளிடம் எப்படிச் சொல்வது?

வேதனையால் அகன்ற விழிகளைத் தாழ்த்தியபடிப் பேசாதிருந்தாள் மதுரா.

மேபாய் மேல் கிடந்த 'ஏர் மெயிலை'ச் சுட்டிக் காட்டினாள் நித்யா.

''அம்மா இன்று ஹாங்காங்கிலிருந்து கிளம்புகிறார்களாம் மதுரா. டோக்கியோ போய்ச் சேர்ந்ததும் அடுத்து எழுதுவதாகத் தெரிவித்து இருக்கிறார்கள். அந்தக் கடிதம் வந்ததும் உங்களுக்குச் சொல்லுகிறேன்.'' என்றாள்.

மனது மிகவும் சோர்ந்து போனாள் மதுரா

மீனாட்சி அம்மாள் எப்போது டோக்கியோ போய்ச் சேர்வது?

அங்கிருந்து அவர் எப்போது எழுதுவது?

அந்தக் கடிதம் எப்போது இங்கே வந்து சேர்வது?

அதற்குள் இவள் கதி என்னவென்று ஆவது?

நித்யாவின் குறுகுறுவென்ற பார்வையைத் தவிர்த்து, ''நான் வருகிறேன்.'' என்று எழுந்தாள்.

''என்ன விஷயம் மதுரா? நான் ஏதாவது செய்யக் கூடுமா?'' என்று பரிவாகக் கேட்டாள் நித்யா.

ஓர் அன்பான குரலில் நடுங்கத் தொடங்கிய உதட்டைபற்களால் அழுத்தியபடி கிளம்பினாள் மதுரா.

கூடவே வந்த நித்யா, ''நீங்கள் வரப் போவது தெரிந்திருந்தால், சிவா விளையாடச் சென்றிருக்கவே மாட்டான். உங்களிடம் அவனுக்கு அவ்வளவு பிரியம்.'' என்று முக்கியம் போலச் சொன்னாள்.

சத்யன் மகனிடம் எனக்கும்தான் மிகவும் பிரியம் என்று நினைத்தாள் மதுரா.

ஆனால் கண்ணீரை அடக்கும் சக்தியற்று வெறுமனே தலையசைத்து விட்டுச் சென்றாள்.

லேசாகத் தலையைச் சாய்த்து அவளையே பார்த்துக் கொண்டு நின்றாள் நித்யா.

அவளைக் கவனித்துக் கொண்டு இருந்தது நித்யா மட்டும் அல்ல.

பிடிவாதமாய்ப் பெற்ற ஒரு மணி நேர விடுப்புடன் மதுரா சென்ற இடம் பற்றி அபீதாவும் அறிந்து கொண்டிருந்தாள்.

சத்யனுடைய பிள்ளை, சகோதரி என்று ஒவ்வொரு வராகப் பிடித்து அவனைச் சுற்றி வளைக்கிறாளா என்று ஆத்திரம் கொண்டாள்.

அவளை எப்படி விரட்டியடிப்பது என்ற தீவிரமான யோசனையோடு அவள் மேல் ஒரு கண்ணை வைத்த படியே இருந்தாள்.

மதுராவின் மேல் ஒரு கண்ணை வைத்திருந்தது அபீதா மட்டும் என்றும் சொல்லிவிட முடியாது.

தடவைக்கு ஒரு மனைவியோடு வரும் ராம் நாத்தும் மதுராவிடம் ஒரு கண்ணைப் பதித்துத்தான் இருந்தான்.

அவனுடைய தந்தை பெரும் பணம் சேர்த்துவிட்டுப் போனவர்.

பணம் சேர்ப்பதில் ஒரு முனைக் கவனம் அவருக்கு; பிள்ளையை மறந்தே போனார்.

விளைவு—பிள்ளை மது மாது என்று இரு திசைகளில் மட்டுமே கவனம் செலுத்தலானான்.

முதல் தடவை பார்க்கும் போதே மதுராவின் முகமும் உடல் எழிலும் அவனிடம் இச்சையைக் கிளப்பின.

ஆனால் கூடவந்தவளின் திறமையில் அவன் கவனம் சிதறவில்லை.

கூடவே இவள் வரக் கூடியவளா என்ற சந்தேகம் வேறு.

ஆன்ல் அன்று ஓரளவு திறந்திருந்த கதவின் பின்னே நடந்த நாடகம் தன் அறைக் கதவைத் திறந்த அவன் கண்ணில் பட்டு அந்த சந்தேகத்தைத் தீர்த்தது.

கண்ணில் பட்டாதை அவனுடைய கோணல் புத்தி ஒருவாறு ஊகித்து நிச்சயப் படுத்திக் கொண்டது.

ஓடிப்போய்த் தண்ணீரைக் கொட்டிவிட்டு வந்து காத்திருந்தான்,

கையைப் பிடித்தும் பார்த்தான்.

கன்னம் பழுக்காததோடு கிக்கும் ஏறிற்று.

அதற்கு மேல்...

யோசனையோடு 'டிரிங்க்ஸ் ட்ரே'யுடன் பெண் வெயிட்டரை அனுப்பும்படி அபீதாவுக்கு டெலிபோன் செய்தான்.

எல்லாப் பணக்காரர்களின் கண்ணும் இவள் மேல் தான் விழவேண்டுமா என்று ஒருபுறம் வயிறு காந்தியது அபீதாவுக்கு.

ஆனால் ராம்நாத்தோடு மதுரா சம்பந்தப்பட்டுவிட்டாள் என்றால் பிறகு சத்யன் அவளைத் திரும்பியும் பார்க்கமாட்டானே என்று குளிர்ச்சியும் உண்டாயிற்று.

இனி வென்றுவிடலாம் என்ற நம்பிக்கையும் ஏற்பட்டது.

கல்பனாவின் கணவனாகச் சத்யனைக் கண்ட போதே அவனுக்காக ஏங்கியவள் அவள்.

அவள் படித்த படிப்பும் ஒட்டல் தொழிலுக்குரியதாக இருந்ததால் 'தோழி தோழி' என்று கல்பனா மூலம் வேலையும் தேடிக் கொண்டாள்.

கல்பனா இறந்ததுகூட அபீதாவுக்கு ஆனந்தம் தான்.

அவள் இறக்குமுன் சொன்னது அது இது என்று மெல்ல மெல்ல சத்யனுடைய வாழ்வில் ஊடுருவலானாள். மெல்ல மெல்ல சத்யனுடைய குடும்பத்தோடு ஒரு சரளமான உறவை ஏற்படுத்திக் கொண்டாள்—சிவா தவிர.

என்னதான் முயன்றாலும் ஒட்டாத அந்தப் பையனை, சத்யனுடைய மனைவி ஆன பிறகு ஒரு பார்வை பார்த்துக் கொள்ள வேண்டும் என்று வன்மத்துடன் காத்திருந்தாள்.

மூன்று நீண்ட ஆண்டுகள் கொக்கெனக் காத்திருந்தவள் பொருளை நேற்று வந்தவள் கொண்டு போய் விடுவாளோ என்று தோன்றியிருந்த அச்சம் அகல அவசரமாய் மதுராவைத் தேடினாள்.

அவள் ஒரு மணி நேர விடுப்புடன் சென்றிருந்த நேரம்.

பல்லைக் கடித்துக் கொண்டு ராம்நாத்துக்கு சமாதானம் சொன்னாள்.

எதற்கும் இருக்கட்டும் என்று மதுரா மேல் ஒரு புகாரும் எழுதி வைத்தாள்.

மறுநாள் சத்யனுடைய அறைக்குள் பணிபுரிய மறுத்தாள் மதுரா.

"என் முகத்தைப் பார்த்தாலே அவருக்கு நாள் கெட்டு விடுகிறது என்கிறீர்களே, நான் வேலை செய்யும் போது எதையேனும் எடுக்க வந்தால் என்ன செய்வது? சுந்தரத்தையே அனுப்புங்கள்." என்று அமைதியாக மொழிந்து விட்டு மற்ற வேலைகளில் ஈடுபடலானாள்.

அபீதாவும் அவளை வற்புறுத்தவில்லை.

ஆனால் மீண்டும் ஒரு புகார் மட்டும் எழுதி வைத்துக் கொண்டாள்.

மறுநாள் ராம்நாத்தோடு வந்தவள் மட்டுமாக டாக்சியில் சென்றாள்.

சாமான் எடுத்துக் கொடுக்க பெல் பாயெல்லாம் தானே ஏற்பாடு செய்து, அவள் செல்வது, வெளியே அதிகம் தெரியாதபடி கவனித்துக் கொண்டாள் அபீதா.

அன்று அலுவலகத்துக்கு மதுராவை அனுப்பும்படி சத்யனிடமிருந்து உத்திரவு பிறந்தது.

"மதுராவுக்கு எக்கச்சக்கமாய் 'டிமான்ட்' வருகிறதே" என்று கேலி போல எடுத்து விட்டாள்.

டெலிபோனின் மறுமுனையில் நிலவிய அமைதி அவளுக்கு எரிச்சலை ஊட்டியது.

அவனுக்கு அக்கறை இருக்கிறதா இல்லையா என்று எப்படிக் கண்டுபிடிப்பது?

யார்? என்ன? என்று பரபரக்காததால் அக்கறை இல்லை என்று மகிழ்வதா?

அன்றித் தானாகச் சொல்லுவான் என்ற அழுத்தம் தான் காரணமா?

அவனாகக் கேட்கட்டுமே என்று விட்டுவிட்டு, அவன் கேளாமலே இருந்து விட்டாலோ விஷயம் அவனுக்குத் தெரியாமலே போய்விடும்.

அதனால் தானாகவே சொன்னாள். "மிஸ்டர் ராம்நாத்துக்கும் அவளேதான் வேண்டுமாம். நேற்றிலிருந்து அறுத்து எடுக்கிறார். அவள் மற்...ற வேலையும் செய்ய வேண்டாமா? அப்புறம்..."

"அவளை அனுப்பி வை—உடனே." என்று அவன் பேச்சில் இடைமறித்துக் கூறி, டெலிபோனை அவன் வைத்து விடவே, அந்த 'அப்புறம்' பற்றி அவனால் சொல்ல முடியாமலே போயிற்று.

இவ்வளவு அவசரமாக ஏன் வரச் சொல்லுகிறான்?

மதுரா பற்றி இவள் கொடுத்த புகாருக்காகவா அல்லது...

அந்தப் புகார்களை ஏன் கொடுத்தோம் என்றிருந்தது அபீதாவுக்கு.

மதுராவின் முகத்தை உற்றுப் பார்த்தபடி, சத்யனின் உத்திரவைச் சொன்னாள்.

மதுராவோ நிமிர்ந்துகூடப் பார்த்தாள் இல்லை.

"வேலை?" என்றாள் சுருக்கமாக.

வேறு ஆள் அனுப்பச் சொல்லி ஹவுஸ் கீப்பரிடம் சொல்லி இருக்கிறேன். நீ உடனே போக வேண்டுமாம்..."

அவள் பேச்சை முடிக்கு முன்னதாகவே திரும்பி நடந்தாள் மதுரா.

அவ்வளவு அவசரமா அவனைப் பார்க்க?

கூடவே சென்று ஆபீஸ் அறையில்நடப்பதை அறிந்து கொள்ள வேண்டும் என்று வெகு தீவிரமாய் எழுந்த ஆசையை அடக்க மாட்டாமல் திணறிப் போனாள் அபீதா.

அபீஸ் அறையில் மேசை மேல் பார்வையைப் பதித்த வண்ணம் அசையாமல் நின்றாள் மதுரா.

தன் இருக்கையிலிருந்து நிதானமாய் எழுந்து நடந்து அவள் முன்னே சென்று நின்று அவளை ஏற இறங்கப் பார்த்தான் அவன்.

பிறகு கேட்டான், "எத்தனை நாள் இது பலிக்கும் என்று உத்தேசம்?"

15

எதைச் சொல்கிறான் என்று புரிந்த படியால் பேசாமலே நின்றாள் மதுரா.

"மதுரா!" என்றான் அவன் அதட்டலாக.

அதற்கும் அவளிடம் பதிலின்றிப் போகவே, "ஊரில் உள்ள அத்தனை ஆண்களுக்கும் உன் உறவு தடையின்றி கிடைக்கிறது. என்னிடம் மட்டும் என்னடி தடை?" என்றான் ஆத்திரத்துடன்.

என்ன கொடுமையெல்லாம் சொல்லுகிறான்!

முகம் இறுகத் திரும்பி நடக்கலானாள் மதுரா.

சட்டென அவள் கரத்தைப் பற்றித் திருப்பி, "எங்கேயடி ஓடுகிறாய்?" என்றான்.

அவனை வெறித்துவிட்டு, ''இது உங்கள் அலுவலகம், சத்யன்.'' என்றாள் மதுரா.

''அதனால்தான் இந்த அளவில் தப்பியிருக்கிறாய், தெரியவில்லை?'' என்றான் அவன் பதிலாக.

''என் அறையில் சுந்தரத்துக்கு என்ன வேலை?'' என்று தொடர்ந்து கேட்டான்.

அவன் கையை விலக்கியபடி, ''இது அபீதாவிடம் கேட்க வேண்டிய கேள்வி.'' என்றாள் அவள்.

''யாரிடம் கேட்பது என்று எனக்குத் தெரியும். நாளையிலிருந்து என் அறையின் முழு வேலையும் உன்னுடையது.'' என்றவன் புரிகிறதல்லவா?'' என்று உதட்டோரம் ஓர் ஏளன வளைவுடன் தொடர்ந்து கேட்டான்.

''சத்யன், இது அநியாயம்.'' என்று பொறுக்க மாட்டாமல் சொன்னாள் மதுரா.

''நியாய அநியாயம் பற்றி நீ பேசுகிறாயா?'' என்று குத்தலாகக் கேட்டான் அவன்.

அவள் பதில் சொல்ல முடியாமல் நிற்கவும், ஏளனமாய்ச் சிரித்துவிட்டு'' நியாய அநியாயம் பற்றி உன்னைப் போலவே எனக்கும் கவலையில்லை.'' என்றான் அலட்சியமாக.

''ஆனால்... இது வெளியே தெரிந்தால் உங்கள் கவுரவம் என்ன ஆகும்?'' என்றாள் மதுரா தவிப்போடு.

''என் கவுரவம் பற்றி எனக்கே இல்லாத அக்கறை உனக்கு என்னம்மா வந்தது?'' என்றான் அவன் கிண்டலாக.

மீண்டும் பொறுக்க முடியாமல், ''பாழாக இருப்பது என் கவுரவமும் என்பதால்தான்.'' என்றாள் அவள்.

''கவுரவமா? உனக்கா?!'' என்று உரக்கச் சிரித்தான் சத்யன். உடனேயே, ''அவ்வளவு கவுரம் பார்க்கிறவள் தான் பலர் காணும் பொது இடத்தில் இன்னொருத்தன் கையைப் பிடித்துக் கொண்டு நின்றாயா'' என்றான் கொதிப்புடன்.

''நான் ஒன்றும் அவர் கையைப் பிடிக்கவில்லை.'' என்றாள் மதுராவும் கோபமுற்று.

வினோதனைப் பற்றிப் பேச இவனுக்கு என்ன தகுதி இருக்கிறது.

அவனும் சினத்துடன் பேசினான். ''அவன் கையை நீ பிடித்தால் என்ன; உன் கையை அவன் பற்ற அனுமதித்தால் என்ன? பாவம், சென்னையில் எப்படி எப்படி குலாவினீர்களோ? இங்கேயும் தொடர முடியாமல் நான் உட்கார்ந்திருந்து விட்டேன். அழுக்குத் துணியா எடுக்க வந்தாய்! 'அப்புறம்' வருகிறாளம், அப்புறம்... போக முடிந்ததா?''

அன்று ரெட்டி வேறு வேலைகள் இட்டதும் அபீதவிடம் முணுமுணுத்ததும் நினைவு வந்தது மதுராவுக்கு.

ஏன் என்று இப்போது புரிந்தது.

''அநியாயமாய்ப் பேசாதீர்கள், சத்யன். அவர் என்னை மணக்கக் கேட்டவர் நான் மறுத்திராவிட்டால்...''

''ஓகோ, என்னைப் போல இன்னொரு ஏமாளியா? அவனை ஏனம்மா மணந்து கொள்ளவில்லை? வெறும் மானேஜர் தானே, பணம் போதாது என்று எண்ணி விட்டாயா? முதலில் அந்த குலைத் இஞ்சினியரை ஏன் விட்டாய்? ஒரு வேளை உன் வண்டவாளத்தை அவனே அறிந்து கொண்டு விட்டானோ? இன்னும் எத்தனை பேர்?...''

மேலே மேலே பேசியவனை வெறித்துப் பார்த்தாள் மதுரா.

எப்போதும் இளம் முறுவலுமாய் இருக்கும் பழைய காலத்திய சத்யனின் முகம் நினைவு வந்தது.

நினைத்து நினைத்து முறுவல் செய்ய வைக்கும் சிறு சிறுகேலிப் பேச்சுகளும் அமர்ந்த குரலும்...

நெறித்த புருவமும் கறுத்த முகமும் கொடுமையான வார்த்தைகளும்...

அடியோடு மாறிப் போய் விட்டானே.

ராமனாக இருந்தவன் நேர் எதிராய் ராவணன் ஆகி விட்டானே.

ராமனே ராவணன் ஆகிப் போனால் காவலுக்கும் கருணைக்கும் யாரை நாடுவது?

சோர்ந்து போய், ''என்னை விட்டுவிடுங்கள், சத்யன். நான் போய் விடுகிறேன்." என்றாள் குரல் கம்ம.

''உன்னை விட்டுவிடுவதா?" மீண்டும் உரக்க நகைத்தான் அவன்.

''எவ்வளவு கஷ்டப்பட்டுக்கொண்டு வந்திருக்கிறேன்; விட்டுவிடுவதா? போ போய் வேலையைப் பார்—நான் அளித்திருக்கும் வேலையை." என்றான் அதிகாரமாக.

அவள் தயங்கவும், ''நீயாகப் போவது என்று நினைத்தால் முடிவெடுக்குமுன் நீ இங்கே வர நேர்ந்த சூழ் நிலையை எண்ணிப் பார்த்து விட்டுச் செய். அது இன்னமும் அப்படியே இருக்கிறது." என்றான் ஒரு குரூரப் பார்வையுடன்.

பதில் கூறாமல் மெல்லத் திரும்பி நடந்தாள் மதுரா.

''கருணா, நெக்ஸ்ட்..." என்று இன்டர் காமில் அவன் குரல் பிசிறற்று ஒலிப்பதைக் கேட்டபடியே வெளியேறினாள்.

அவனால் எப்படிப் பாதிப்பின்றி இயல்பாகப் பேச முடிகிறது!

இவளுக்கு மட்டும் வாயைத்திறந்தால் தொண்டையை விட்டு வார்த்தைக்குப் பதில் விம்மல் அல்லவா வரும் போல இருக்கிறது.

கீழே இருந்த 'டாய்லட்'டில் நிறையக் குளிர் நீரை முகத்தில் அடித்துக் கழுவிக் கொண்டு மெல்லப் படியேறிச் சென்றாள்.

அங்கே இவளது வருகைக்காக வெகு ஆவலாகக் காத்திருந்தாள் அபீதா.

மதுரா மெல்லப் படியேறி வந்ததும், ''என்ன விஷயம்?" என்று அமர்த்தலாக வினவினாள்.

தன் பிரச்சினையிலேயே மூழ்கிக் கிடந்த மதுராவோ புரியாமல், ''என்னது?" என்று வினவினாள்.

அடக்கமாட்டாமல், ''அ அதுதான். சத்யன் அழைத்த விஷயம்." என்று பரபரத்தாள் அபீதா.

ஆச்சரியத்துடன் அவளுடைய பரபரப்பைக் கவனித்தாள் மதுரா.

இயல்புக்கு விரோதமாய் எழுந்த ஒரு குரூரத்துடன், ''அதை எம். டி. யிடமே கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்." என்று மொழிந்துவிட்டு, திரும்பிப் பாராமல் சென்று இன்டோர் செடிகளுக்கு நீர் ஊற்றத் தொடங்கினாள்.

அபீதாவிடம் ஒரு கொடிய எதிரியைத் தேடிக் கொண் டோமோ என்ற எண்ணம் ஒருகணம் அவளுக்குத் தோன்றியது.

எவ்வளவு கொடிய எதிரி என்று தெரியாத காரணத் தால் அந்த எண்ணம் அவளை அதிகம் பாதிக்கவில்லை.

தெரிந்திருந்தாலும் பாதித்திருக்குமா என்பது சந்தேகம்தான்.

இப்போது அவளுடைய பெரிய பிரச்சினை சத்ய னுடைய வடிவத்தில் அல்லவா இருந்தது.

அவனுடைய எண்ணம் தெளிவாகப் புரிந்தது.

இன்னமும்கூடப் பலவந்தம் என்கிற அளவுக்கு அவன் செல்ல மாட்டான் என்பதில் அவளுக்கு நம்பிக்கை இருந்தது.

ஆனால் அவனை மறுக்கும் சக்தி தன் உடலுக்கு எவ் வளவு இருக்கும் என்பதில்தான் அவளுக்கு சந்தேகம்.

அவன் தொட்டால் அப்படித் துவண்டு விடுகிறதே!

கடைசியில் அவளது பழிவாங்கும் வெறி, தன்னையும் அழித்து அவனையும் வெறுக்கடிக்கப் போகிறது.

இந்த நிலையிலும் மீனாட்சி அம்மாளுடைய நல்ல பெயரையோ அவருக்கு அளித்த வாக்குறுதியையோ காப் பாற்றித்தான் ஆகவேண்டும் என்று மதுரா நினைக்க வில்லை.

ஆனால் அவள் கூறுவதை அவன் காது கொடுத்துக் கேட்க வேண்டுமே.

கேட்டாலும் அவன் அதை நம்ப வேண்டுமே.

அவளிடம் அவ்வளவு இழிவான அபிப்பிராயம் கொண்டு இருப்பவன், அவனை ஈன்ற தாயைப் பற்றி அவள் கூறுவதை எப்படி நம்புவான்?

உறுதியான சான்று இல்லாமல் நிச்சயமாக அவன் அவளை நம்பப் போவது இல்லை.

உடனே அந்தச் சான்றை—சத்யனுடைய தாயாரின் வாக்கை அடைவதற்கோ ஒரு வழியையும் காணவில்லை.

இதிலும்கூட அவளுக்கு ஒன்றும் புரியவில்லை.

அவளை நாசப்படுத்தும் எண்ணத்தில் கொண்டு வந்தவன் என்றால் இத்தனை நாள் காத்திருந்தது ஏன்?

இப்போது திடீரென்று என்ன ஆத்திரம்?

வினோதனிடம் பழகுகிறாள் என்று ஆத்திரம் வந்ததா?

என்னவாக இருந்தாலும் அப்போதைக்கு அது முக்கியம் இல்லை என்று ஒதுக்கினாள்.

செக்குமாடாய் மனம், மீட்சிகாண முடியாத அன்றையப் பிரச்சினையிலேயே மீண்டும் மூழ்கியது.

ஆனால் அதைப் பற்றியும் அதிகம் யோசிக்க முடி யாமல் இடையூறாய் ராம்நாத் வந்து சேர்ந்தான்.

''ஷாப்பிங் சென்ட்ர்'வரை என்னோடு வரமுடியுமா?'' என்று கேட்டான்.

''அது கீழ்த் தளத்தில்...'' என்று விளக்கியவளை இடை மறித்து, ''அது இருக்கும் இடம் எனக்கும் தெரியும் சில முக்கியமான பரிசுகள் பொருத்தமாகத் தேர்ந்து எடுக்க வேண்டும். அத்தோடு கையில் பணமாய்க்கொண்டு வரவில்லை. என் 'செக்'கை அங்கே ஒத்துக்கொள்வதற் காக, நான் இங்கே தங்கியிருப்பதற்கு சாட்சியும் சொல்ல வேண்டும்'' என்று விவரித்தான்.

அவள் மேலும் தயங்கவும், ''உங்கள் ஃப்ளோர் மானேஜரிடம் அனுமதிகூட வாங்கி விட்டேன். ஏன்,

அவளுடைய ஆலோசனையின் பேரில்தான் உன்னை அழைப்பதே" என்று வற்புறுத்தினான்.

"வேண்டுமானால் நீயே கேட்டுப்பார்" என்று அவளை அபீதாவிடம் அழைத்துச் சென்றான்.

அபீதாவும் 'ஆம்' என்றாள்.

"எனக்கு வேலை இன்..." என்று தொடங்கிய மதுராவை அபீதா இடைமறித்தாள்.

"அதைச் சுந்தரத்திடம் செய்யச் சொல்லுகிறேன்." என்றவள் குரலைத் தணித்து, "பெரிய கஸ்டமர். இவரிடம் மறுத்துப் பேசி எரிச்சல் மூட்டினால் சத்யனுக்குக் கோபம் வரும். இவரைக் காத்திருக்க வைக்காமல் போய் வா. அனேகமாய் உனக்குக்கூட ஏதாவது கிடைத்தாலும் கிடைக்கும்" என்று பல் தெரியச் சிரித்தாள்.

முதல் முறையாகத் தன்னிடம் காட்டப்பட்ட இந்தச் சிரிப்பு மதுராவுக்கு வியப்பை ஊட்டியது.

பாம்பு பல்லைக் காட்டுவது கடிப்பதற்காகவே என்ற எண்ணம் ஏனோ தோன்றியது.

ஆனால் இவளால் தன்னை என்ன செய்துவிடமுடியும் ஏன், சத்யனைத் தவிர வேறுயாரால்தான் தன்னை என்ன செய்துவிட முடியும் என்று உள்ளூர வேதனைப்பட்ட படியே ராம்நாத்தை அழைத்துச் சென்றாள் மதுரா.

வெள்ளி சரிகை பரவிய ஓர் அழகிய நீலச் சேலையையும் 'பொருத்தமான வெள்ளியில் உயர்ந்த நீலக் கற்கள் பதித்த நகைசெட் ஒன்றையும் ஆறாயிரம் ரூபாய்க்கு வாங்கினான் ராம்நாத்.

"உன் உதவிக்காக..." என்று காதணி ஒன்றை அவன் பொறுக்கியபோது மரியாதையுடனே மறுத்து விட்டுச் சென்றாள் அவள்.

தெரிந்தவர்கள் நிற்கிறார்கள் போலும் என்று எண்ணியபடி அவளது மெல்லிய இடையையும் இடைக்கீழ் கடையும் தொடைகளையும் ஒரு கோணல் பார்வையுடன் அளவிட்டபடி நின்றான் அவன்.

அந்தச் சேலை நகைகளுக்குப் பெறுமதிதான்!

அவன் அவ்வளவு நம்பிக்கைப் பெற காரணம் இருந்தது.

முன்தினம் மதுவுடன் மதுரா வராதது அவனுக்கு ஆத்திரத்தை அளித்தது.

ஃப்ளோர் பொறுப்பாளரான அபீதாவிடம் அதட்டிப் பேசினான்.

அவனை உணர்ந்த அபீதா அவனை மேலும் உசுப்பீ விட்டாள்.

"அவள் பெரிய புளியங் கொம்பு தேடுகிறவள். நீங்கள்..." என்று இழுத்தாள்.

சாதாரண நிலையில் இருந்தவன் என்றால், புளியங் கொம்பு தேடுகிற பெண் இந்த வேலை செய்வானேன் என்று தோன்றியிருக்கும்.

ராம்நாத் இருவகை மயக்கங்களில் இருந்தவன் ஆயிற்றே.

"நானும் பணக்காரன்தான்." என்று வீராப்பு பேசினான்.

"அதைக் காட்டினால்தானே அவளுக்குப் புரியும்?" என்று மெதுவாகச் சிரித்தாள் அபீதா.

"இப்போதே வரச் சொல்லுங்கள். நான் காட்டுகிறேன்." என்றான் அவன் வேகமாய்.

''அடேயப்பா, என்ன அவசரம்!'' என்று கேலிபோலச் சிரித்தாள் அபீதா. ''சாரி. இப்போது அவளுக்கு வேறு ஒருவருடன் எங்கேஜ்மெண்ட் இருக்கிறதே.'' என்றுள் தொடர்ந்து.

''அடேடே! இங்கே இதெல்லாம் கிடையாது என்று நினைத்தேனே.'' என்றான் ராம்நாத் வியப்புடன்.

''காம் ப்ளக்சில் கிடையாது. இவள் தனியாகச் செய்கிறாள்.'' என்று கூசாமல் சொன்னாள் அபீதா.

''ஓகோ!'' என்றான் அவன். தொடர்ந்து, ''இன்று அவள் இல்லையானால் பரவாயில்லை. இங்கேயும் ஒருத்தி இருக்கிறாள் என்ற விஷயம் தெரியாமல் அனாவசியமாய் அழைத்து வந்துவிட்டேன். போகிறது, நாளை அனுப்பி விடுகிறேன். அதன்பிறகு நான் யார் என்று அந்தப் பெண்ணுக்குக் காட்டுகிறேன்.'' என்று பெருமை பேசினான்.

மறுநாள் கூட்டிவந்தவளை அனுப்பிவைத்தான்.

நகை செட் வாங்கினான்.

ஆறாயிரம் ஆயிற்று.

முதல் தடவைக்குப் போதும் என்று எண்ணினான்.

ஆனால் நின்றுபேசாமல் அவள் சென்றவிதம் மனதில் உறுத்த யோசனையோடு அபீதாவிடம் வந்து நின்றான்.

''பத்தினி வேடம் போடுவதில் அவளுக்குக் கொஞ்சம் ஆசை. பரிசைக் கொடுத்துவிட்டுப் பாருங்களேன். அவள் மூடு சரியில்லாமல் தயங்கினால்கூட நீங்கள் ஆண்பிள்ளை இல்லையா?'' என்று மேலும் சீண்டிவிட்டாள் அவள்.

மேலும் அவன் புத்தியை மழுங்கடிக்க, உங்கள் அறையில் 'பிளாக் டாக்' விஸ்கி வைத்தேனே.'' என்றாள்.

''ஓ..தாங்க்ஸ். ஆனால் அந்தப் பெண்ணை இன்று..''

லேசாகச் சிரித்தாள் அபீதா.

''திடுதிப்பென்று கேட்டீர்கள் என்றால் எப்படி? அவளுக்கு வேறு எங்கேஜ்மெண்ட் இல்லை என்றால் இன்றே அல்லது நாளை 'சரிதானா?'" என்றாள் குழைவாக.

''ஓகே!'' என்று உற்சாகமாகப் போனான் அவன்.

ஆனால் மாலையெல்லாம் காத்துக்கிடந்தவனுக்குக் கிட்டியது ஏமாற்றமே.

அபீதாவிடம் வஞ்சனையில்லை.

அவளுக்கு இருந்த ஆத்திரத்தில் மதுராவை கரகரவென்று இழுத்துப்போய் ராமநாத்தின் அறைக்குள் தள்ளிவிட அவள் தயார்தான்.

எதையாவது சாக்கிட்டு அவன் அறைக்கு அனுப்ப அவள் துடித்தாள்.

ஆனால் எவ்வளவோ வற்புறுத்தியும் முடிந்து விட்ட வேலை நேரத்துக்குமேல் வினாடி நிற்கவும் மதுரா மறுத்து விட்டாள்.

அபீதா என்ன வேண்டுமானாலும் புகார் செய்து கொள்ளட்டும்' இப்போது உள்ள வேதனைக்கு மேலாக என்ன வந்து விடப் போகிறது என்று தன் இயல்புக்கே மாறான அசட்டையும் பிடிவாதமுமாய் ஒரேயடியாக மறுதலித்து விட்டுப் போய்விட்டாள் அவள்.

மறுநாள் காலையில், ''நீ உன் உடம்பை அலட்டிக் கொண்டால் எனக்குத் தாங்கவில்லை. தனக்குரிய வேலையை அந்தப் பெண்ணே செய்யட்டும்' என்கிறார் சத்யன். நீயே அவர் அறைக்குக் காபிட்ரே எடுத்துப்போ''

என்று அபீதா கூறியபோது மதுரா ஆச்சரியப்பட்டு விட வில்லை.

எதிர்பார்த்ததுதானே.

இறுகிய முகத்துடன் ட்ரேயைக் கொண்டுபோய் உட்காரும் அறைநடுவில் கிடந்த டீபாய்மேல் வைத்தாள்.

முதுகில் ஏதோதுளைத்தது.

வேறென்ன? அவன் பார்வைதான்.

படுக்கை அறைக் கதவில் லேசாகச் சாய்ந்தவாறு அவளையே பார்த்தபடி நின்றிருந்தான் சத்யன்.

கலைந்த தலையும், பைஜாமாவும், வெற்றுமார்பும் மனதில் பதிலாக, என் ராமா, நீயேவா ராவணன் ஆகப் போகிறாய் என்று வேதனைப்பட்டபடியே அவனை வெறித்துப் பார்த்தாள் மதுரா.

அந்தப் பார்வையில் அவன் எதைக் கண்டானோ நிமிர்ந்து, ''குட். இதே போல என் அறையில் மற்ற வேலைகளும் உன்னுடையதுதான். நினைவிருக்கட்டும்.'' என்று அமர்த்தலாகக் கூறிவிட்டுத் திரும்பிச் சென்றான்.

உதட்டைக் கடித்துக்கொண்டு வெளியேறினாள் மதுரா.

முந்தைய நாட்களின் பதட்டம், படபடப்பு ஒன்றும் தோன்றவில்லை.

உள்ளுர முடிவு செய்து விட்டதாலோ?

சான்றுகாட்டி விளக்க முடியாவிட்டாலும் தான் தவறு செய்தவள் அல்ல என்று சொல்லிப்பார்க்க வேண்டும்.

நம்பாமல் நெருங்கினால் உயிரைவிட்டு விடுவேன் என்று கூறி அதற்கும் அவன் மீறினால் மெய்யாகவே

உயிரை விட்டுவிட வேண்டியதுதான் என்று முடிவு செய் திருந்தாள் மதுரா.

தாயைப்பற்றிய தவிப்பைக்கூட இனி தம்பி பார்த்துக் கொள்வான் என்ற நம்பிக்கை துடைத்துவிட்டது.

இப்போதும்கூட, தற்கொலை உட்பட எதையுமே அவன் நம்புவான் என்ற நம்பிக்கை அவளுக்குச் சிறிதும் இல்லை. தாய் வரும் வரை காத்திருப்பான் என்ற எண்ணமும் இல்லை.

இப்போதைக்கு அவனை ஏமாற்றிவிட்டு அவன் தாய் வந்ததும் அவளிடம் ஒழுக்கம், கற்பு என்று கதைத்து அவன் தாய் மூலமாகவே தப்பத் திட்டமிடுவதாகத்தான் நினைப்பான் என்றே தோன்றியது. அதனால் அவள் வார்த்தைகளை அவன் காதில் போட்டுக்கொள்ளப் போவதில்லை.

எதிர்காலத்தைப் பற்றிய நம்பிக்கையை முழுவதுமாக இழந்துவிட்ட அவளுக்கு எப்படியோ ஒன்றிரண்டு நாட் களில் இந்த வேதனையெல்லாம் முற்றுப்பெற்று விடும் என்ற எண்ணத்தில் ஒருவிதமான அமைதியே உண்டாகி விட்டது.

எப்படியோ, புழுப்போல அரித்துக் கொண்டே இருக் கும் இந்த வேதனையிலிருந்து விடுதலை கிடைக்கும் அல்லவா?

தண்ணீருக்குள் தூக்கும் சுமைபோல எல்லாமே பளுக் குறைந்து தோன்ற, இதயம் இருக்கும் இடத்தில் ஒரு சின்ன இறுக்கம் தவிர மற்றபடி கனவில் நடப்பவள் போல நடமாடிக் கொண்டு இருந்தாள் மதுரா.

இந்தக் கனவுலகம் சிதையும் நேரமும் வந்தது.

சுமார் பதினோரு மணியளவில் அபீதாவின் டெலி போன் குரைத்தது.

எடுத்துப் பார்த்தால் ராம்நாத்.

இன்றைக்கும் அவளுக்கு ''எங்கேஜ்மெண்டா?'' என்றான் எரிச்சலுடன்.

அபீதாவும் துணிந்துவிட்டாள்.

'தன்னுடைய பணிகளுக்கு மதுராதான் வரவேண்டும்' என்ற சத்யனின் உத்திரவு கொஞ்சநஞ்சம் இருந்த தயக்கத்தையும் துடைத்தெறிந்தது.

இந்த மதுராவை அகற்றியே ஆகவேண்டும்.

அதற்கு இதைவிட்டால் வாய்ப்பு இல்லை.

விஷயம் தகராறு ஆனால்கூடத் 'தனக்கு ஒன்றும் தெரியாது,'' என்று ராம்நாத்தைக் கை காட்டி விட முடியும்.

எனவே லேசாகச் சிரித்தபடி, ''இன்று அதிருஷ்டம் உங்கள் பக்கம்.'' என்றாள் மெல்லிய குரலில் ராம் நாத்திடம்.

டெலிபோனை வைத்துவிட்டு, சுந்தரத்தை அழைத்து ஒரு வேலை சொல்லிக் கீழ்த்தளத்தில் மறுகோடிக்கு அனுப்பினாள்.

மதுராவை அழைத்து, ''ஏழாம் நம்பர் அறையில் பழங்கள் தீர்ந்துவிட்டதாம். இந்த ஆப்பிள்களைக் கொண்டு கொடுத்துவிட்டு வா.'' என்று கொடுத்தனுப் பினாள்.

தவறாக எதுவும் எண்ணாமல் பழங்களுடன் சென்ற மதுரா வசமாக மாட்டிக் கொண்டாள்.

16

கதவைத் தட்டிவிட்டு உள்ளே சென்ற மதுரா, ஃபிரிஜ் அருகே இருந்த மேசை மேல் இருந்த கூடையில் பழங்களை வைத்தாள்.

சாவி திருப்பும் ஓசை கேட்டு அவள் திரும்பியபோது கதவை உட்புறமாய்ப் பூட்டிச் சாவியை எடுத்துக்கொண்டு இருந்தான் ராம்நாத்.

முதலில் மதுராவுக்கு ஒன்றும் புரியவில்லை.

தான் இருப்பது தெரியாமல் பூட்டிவிட்டானோ என்று நினைத்தாள்.

இவனோடு வந்த பெண்ணை அங்கே காணவில்லை என்று அறிந்தபோது திகைத்தாள்.

அப்போதும்கூடச் சட்டென்று திரும்பி, வெப்பநிலை இதப்படுத்தப் பட்டிருந்த அந்த அறையின் சன்னலைத் திறந்து உதவி கோரிக் கத்தியிருக்கலாம்.

ஆனால் தன் வேதனையிலேயே உழன்று உழன்று மந்தித்துப் போயிருந்த மூளை அந்த மார்க்கத்தை ஒரு வாறு கண்டுபிடித்துச் செயலாற்றுமுன் அவன் அவளை நெருங்கிவிட்டான்.

''நேற்று வாங்கிய சேலையும் சஃபையர் செட்டும உனக்குத்தான். இருவருக்கும் சுகம் தரும் வழியில் அதைச் சம்பாதித்துக் கொள்கிறாயா'' என்று சரசமாய் வினவிய படி அவளுடைய ஏப்ரன் முடிச்சில் கை வைத்தான் ராம் நாத்.

சட்டென உயிர் வர, அவன் கையைத் தட்டிவிட் டாள் மதுரா.

''என்ன உளறுகிறாய்? அதையெல்லாம் நீ அழைத்து வந்தவளிடம் வைத்துக் கொள். முதலில் கதவைத் திற.'' என்று அதட்டினாள்

''அவளை நேற்றே அனுப்பிவிட்டேனே.'' என்று கையை விரித்தான் ராம்நாத்.'' அவளுக்குப் பதிலாகத் தான் உன்னை வரவழைத்திருக்கிறேன். நீ மட்டும் நல்ல படியாக நடந்துகொண்டால் தங்கத்திலேயே சஃபையர், டைமண்ட், எமரால்ட் என்று எல்லாம் செட் செட்டாக வாங்கித் தருவேன் வாடி, கண்ணா.'' என்று அவள் தோளைப் பற்றினான்.

தீப் பொறியாய் சுரீரென்று அவள் கொடுத்த அறை அவனை ஓரளவுக்கு நிதானத்துக்குக் கொண்டு வந்தது

ஆனால் அதுவே கோபவெறியாய் மாறி, ''என்னையா அடித்தாய், கழுதை. இன்று உன்னை விடுவதில்லை.'' என்று ஆவேசத்துடன் அவளை நெருங்கலானான்.

உயிருக்குயிரானவன் சத்யன்.

அவன் அத்துமீறித் தொடுவதையே சகித்துக் கொள்ள முடியாதவள் ஆயிற்றே அவள்.

எவனோ ஒரு ஒழுக்கம் கெட்ட காமுகன் கைபட விடுவாளா?

மதுரா தன் ஜீவமரணப் போராட்டத்தை தொடங்கினாள்.

ஆனால் குடிவெறியும் கோபவெறியுமாய், ஆண் பிள்ளைக்குரிய மாமிசப் பலத்தோடு அவன் நெருங்குகையில் அவள் எதைக் கொண்டு போரிடுவது?

தம்பியிடம் பெருமையடித்த கத்தியோ, சத்தியனைக் கண்ட தினத்தில் இருந்து பெட்டியடியில் உறங்கியது.

மனதை அழுத்திய வேதனையில் அவள் சில தினங்களாகச் சரியாகச் சாப்பிடவும் இல்லை.

ஆயினும் மனத்தின் உறுதி ஒன்றே ஆயுதமாகக் கொண்டு ராம்நாத்தை எதிர்த்தாள் மதுரா.

தன் அறைக்குள் சென்ற சத்யனுக்கு மதுரா அங்கே இல்லாதது சினமூட்டியது.

சீர் செய்யப்படாத படுக்கையும் பூச்சாடியின் பழைய மலர்களும் அவள் அங்கே வரவே இல்லை என்பதை உணர்த்தின.

அவனது ஆணைக்குப் பணிந்து அவள் அங்கே வேலை செய்து கொண்டிருந்தால்கூட அவன் மனம் இளகியிருக்குமோ, என்னவோ?

ஆனால் மதுரா தன் உத்திரவை அலட்சியப் படுத்தி விட்டாள் என்பதில் அவன் கொதித்துப் போனான்.

'என்னிடமா உன் ஜாலம்?' என்று ஆத்திரத்துடன் இன்டர்காமில் அபீதாவை அழைத்தான்.

''மதுராவை உடனே இங்கே அனுப்பு.'' என்று கட்டளையிட்டான்.

பழம் நழுவிப் பாலில் விழுந்து அதுவும் நழுவி வாயில் விழுந்தாற் போல ஆயிற்றே அபீதாவுக்கு.

உள்ளூரச் சிறு அச்சம் இருந்த போதிலும் ராம்நாத்தின் அறைக்குச் சென்ற மதுரா அரை மணி நேரம்ஆகியும் திரும்பவில்லை என்பது அவளுக்கு மிகுந்த ஆனந்தத்தை அளித்தது.

அறைக்குள் என்ன நடந்து கொண்டிருக்கும் என்பதை அவள் தனக்கே உரிய வகையில் ஊகித்துக் கொண்டாள்,

ராம்நாத்தின் பரிசுகள் பணமும் நகையுமாக மதுராவுக்கு கிடைக்கும் என்று கொஞ்சம் வயிறு எரிந்த போதும் சத்யன் இனித் தனக்குத்தான் என்ற நினைவில் பூரித்துப் போனாள்.

ஆனால் இதில் இன்னமும் ஒரு சின்ன வேலை பாக்கியிருந்தது.

இந்த விஷயம் சத்யனுக்குத் தெரிந்தால் அல்லவோ அவன் மதுராவை விஷமென விலக்குவான்?

தன்மீது ஐயம் ஏற்படாத வகையில் சத்யனுக்கு இதை எப்படித் தெரியப்படுத்துவது என்று அவள் யோசித்துக் கொண்டிருந்தபோதுதான் சத்யனே அவளைப் பற்றிக் கேட்கவும், அபீதா மதுவுண்ட மந்திபோல் ஆகிவிட்டாள்.

''நான் சொன்னால் 'விடுவிடு' என்பீர்கள் சத்யன். ஆனால் தனித்திருக்கும் ஆண்களின் அறைக்கு என்றால் ஓடி ஓடிப்போவதும் போனால் மணிக்கணக்கில் அங்கேயே உறங்கி விடுவதும் அவளுக்கு எப்போதுமே பழக்கம்.'' என்று குறையோடு பேசுகிறாள்.

''இப்போது எங்கே?'' என்றான் அவன் சுருக்கமாக.

''ஆப்பிளை தான் தான் கொண்டு போய்க் கொடுப்பேன் என்று அவள் அங்கே சென்று ஒருமணி நேரம் ஆகிறது. இங்கே சுந்தரம் பாவம்... அப்பா!''

''எங்கே?'' என்ற சத்யனின் அதட்டல் காதுகளில் அதிர்ந்தது அபீதாவுக்கு.

போகட்டும்; போய்க் கண்குளிரப் பார்க்கட்டும் என்ற வக்கிரத்துடன், ''ராம்நாத்தின் அறை. நம்பர் ஏழு.'' என்றாள் அவள் திருத்தமாக.

டெலிபோனை அவன் வைத்த வேகத்தில் மீண்டும் காது அதிர்ந்தது.

ஓர் ஏளனச் சிரிப்புடன் அடுத்து வரும் பூகம்பத்துக் காகக் காத்திருந்தாள்.

ராம்நாத்!

கண்மண் தெரியாத ஆத்திரம் வந்தது சத்யனுக்கு.

ஆபரேட்டரை அழைத்து ராம்நாத்தின் அறைக்குத் தொடர்பு கொடுக்கச் சொன்னான்.

அங்கே யாரும் எடுக்கவில்லை என்றதும் ஏனோ உடம்பு ஆடிப் போயிற்று.

அவசரமாக அலமாரியில் இருந்த மாஸ்டர் கீயுடன் ராம்நாத்தின் அறைக்கு ஓடினான்.

எப்படியும் கொஞ்ச நேரத்தில் தான் திரும்பவில்லை என்பதைக் கண்டு சுந்தரத்தை அபீதா அனுப்புவாள் என்றுதான் முதலில் நினைத்தாள் மதுரா.

ஆனால் அது நடக்கவில்லை என்பதோடு, ராம்நாத்தும் அவளது வரவை எதிர்பார்த்தவன் போல நடந்து கொண்டதும் நினைவுவர நெஞ்சு உலர்ந்து போயிற்று.

இது அபீதாவும் சேர்ந்து செய்த சூழ்ச்சி!

பாவீ!

பெண்ணுக்கு பெண்ணே என்ன பாதகம் செய்து விட்டாள்!

ஆனால் ஆத்திரப்படக்கூட நேரம் இல்லாமல் அவன் வெறி நாயாய் விரட்டிக் கொண்டிருந்தான்.

கையில் அகப்பட்டதை எல்லாம் எடுத்து அவன் மீது எறிந்தாயிற்று.

பல் அழுந்தக் கடித்தாயிற்று.

நகங்களால் முகம் மார்பெங்கும் பிராண்டியாயிற்று.

அவன் மேலே மேலே வெறி பிடித்தவன் போல் விரட்டவும் ஓடிப் பார்த்தாள்.

ஆனால் பெரிதுதான் என்றாலும் அந்த ஒரே அறைக்குள் எவ்வளவு நேரம் ஓடுவது?

பயமும் சக்தியின்மையுமாக கைகால்கள் தளரலாயின.

மீண்டும் அவன் பிடியில் சிக்கினாள்.

ஆனால் அதற்குமுன் பலமுறைகள் நடந்ததும்பால விடுவித்துக் கொள்ள முடியாமல் போயிற்று.

எவ்வளவோ முயன்றும் விடுபட இயலாது போகவும தோற்கப் போகிறோம் என்று நிராசையுற்ற சமயம் ராம் நாத்தின் பிடி தானாகத் தளர்ந்தது.

திமிறிக் கொண்டிருந்த வேகத்தில் தடுமாறி விழுந்து நிரமத்துடன் எழுந்து அவள் பார்த்தபோது ராம்நாத் தைத் துவைத்துக் கிழித்துக் கொண்டிருந்தான் சத்யன்.

பலவீனமான பெண்ணிடம் வீரம் காட்டியவன் இப்போது பயந்து ஓடிக் கொண்டிருந்தான்.

கடைசியாக அவனை உதைத்துத் தள்ளிவிட்டு, "உன் தந்தைக்காக இத்தனை நாள் உன் லீலைகளைக் கண்டும் காணாதது போலப் பொறுத்திருந்தேன். கடைசியில் ... நீ...ீ. இனிமேல் வேறு இடம் தேடிக் கொள். இனி ஒரு தரம் பஞ்சவடிக்குள் காலடி எடுத்து வைத்தாயானால் முழுசாகத் திரும்ப மாட்டாய் ஜாக்கிரதை." என்று எச்சரித்துவிட்டுத் திரும்பி மதுராவைப் பார்த்தான்.

நிற்க முடியாமல் சுவரில் சாய்ந்தபடி நனைந்த புழுவாய் வெடவெடத்துக் கொண்டிருந்த அவளைச் சட்டென வாரி அள்ளிக் கொண்டு வேகமாக தன் அறைக்குச் சென்றான்.

அவளைக் கைகளில் ஏந்தியபடியே சோபாவில் அமர்ந்து இதமாய் அணைத்துக் கொண்டான்.

வேறு நினைப்பின்றி அவன் தோளில் முகம் புதைத்து மார்போடு ஒண்டிக் கொண்டாள் மதுரா.

அவளது உடல் இன்னமும் நடுங்குவதையும், மார்பு படபடப்பதையும் உணர்ந்த அவன் பிடி ஆறுதலாய் இறுகியது.

மெல்ல மெல்லப் பதட்டம் அடங்கி அவளுக்குச் சுய நினைவு வர வெகு நேரம் ஆயிற்று.

இருக்கும் நிலையை உணர்ந்து மெல்ல விலக முயன்றாள்.

அவன் விடாமல், "இவ்வளவு நேரம் இல்லாதது இப்போது என்ன வந்தது," என்றான் அதட்டும் குரலில்.

குரலுக்கு மாறாகக் கை அவள் கூந்தலை மெல்ல வருடியது.

ஓர் ஆபத்தில் வந்த இளக்கம்.

இது எப்படி நிலைக்கும்?

அவள் முகத்தை மிருதுவாகவே பற்றித் தன் புறம் திருப்பிக் கேட்டான். "இப்போது சொல்லு. ஏன் அப்படிச் செய்தாய்? பணத்துக்காக என்றால் இன்னும் ஏன் கன்னியாகவே இருக்கிறாய்?"

மெல்ல மெல்ல அவன் சுதி ஏறவும் சொல்லிவிடலாமா என்று யோசித்தபடி எழமுயன்றாள் மதுரா.

அவளைச் சட்டென விலக்கி நிறுத்தியபடி காலும் எழுந்தான் சத்யன்.

''சொல்லமாட்டாய்?'' என்று உறுமியவன், அவள் சற்றும் எதிர்பாராத விதமாய் ஓங்கி அவளை அறைந்து விட்டான்.

அவன் அறைந்த வேகத்தில் தடுமாறிப்போய், திறந்து கொண்டிருந்த வெளிக் கதவருகே சென்று விழுந்தாள் மதுரா.

இரு கரங்கள் அவளை ஆதரவாய்த் தூக்கவும் திகைப்புடன் நிமிர்ந்தவள், ''அம்மா!'' என்று ஓர் விம்மலுடன் அவர் காலடியில் சுருண்டாள்.

உள்ளே வந்து கொண்டிருந்த மீனாட்சியைக் கண்டதும் சத்யனும் திகைத்தான்.

''அம்மா! நீங்கள் எப்போது...'' என்று தொடங்கியவன், தன் தாயார் மதுராவைப் பரிவாகத் தூக்கி அணைப்பதைக் கண்டதும், ''அம்மா, இவள் யார், எப்படிப்பட்டவள் என்று தெரியாமல் ஒரேயடியாக உருகாதீர்கள்.'' என்றான் வெறுப்புடன்.

மதுராவின் விழிநீரை மிருதுவாகத் துடைத்தபடி, ''இவள் மதுரா. தொழிலில் கஷ்டம் என்று நீ எழுதியதும் நீங்கள் உங்கள் தொழிலைச் சீர்ப்படுத்துங்கள். நான் மாதம் இரண்டாயிரம் தீனார்—அதாவது அறுபதாயிரம் ரூபாய் சம்பாதிக்கும் குவைத் இஞ்சீனீயரை மணக்கப் போகிறேன்' என்று உனக்கு எழுதியவள்.'' என்றார் மீனாட்சி அமைதியாக.

மதுராவை அழைத்துச் சென்று தானும் அவள் அருகே அமர்ந்து கொண்டு திரும்பிப் பார்த்தார்.

மகனுடைய இமைகள் இருங்கிப் பார்வை கூர்மை பெறுவதைக் கண்டார்.

லேசாகத் தலையசைத்துவிட்டு, ''எல்லாம் எனக்கு நன்றாகவே தெரியும். ஏனென்றால் அப்படி எழுதும்படி அவளைக் கேட்டுக் கொண்டதே நான்தானே'' என்றார் தொடர்ந்து.

''அம்மா!'' என்றாள் மதுரா எச்சரிப்பது போல.

அவளது கையைப் பற்றி மெல்ல வருடியபடி, ''ஆனால் ஏன் அம்மா?'' என்று ஆதங்கத்துடன் வினவிய மகனுக்குப் பதில் சொன்னார்.

''உட்கார், சொல்லுகிறேன்.'' என்று அவன் அமர்ந்ததும் தொடங்கினார்.

''கண்ணா, ஆறு ஆண்டுகளுக்கு முன்பாக இந்தப் பஞ்சவடி காம்ப்ளக்சை உன் அப்பா விஸ்தரிக்கத் தொடங்கியதும், சுமார் இரண்டு ஆண்டுகளில் அது முடிவடைகிற சமயம் மேற்கொண்டு பணம் இல்லாமல் தத்தளித்ததும் நினைவிருக்கிறதா?''

''விற்றுவிடலாமா என்றுகூட யோசித்...'' என்று தொடங்கிய மகன், தாயின் முகத்தில் தோன்றிய வேதனையைக் கண்டு நிறுத்தினான்.

''இந்தக் காட்டேஜ்கள், நீச்சல் குளம், ஐந்து நட்சத்திரத் தகுதி எல்லாம் உன் அப்பாவின் பல்லாண்டு காலக் கனவுகள், கண்ணப்பா. உன் அப்பாவுக்கு ஏன் 'ஸ்ட்ரோக்' வந்தது தெரியுமா? கடைசிச் செலவுகளுக்கு பாங்கில் பணம் தர முடியாது என்று சொன்னதால்தான். கல்பனாவை மணந்து அவளுடைய தந்தையின் உதவியை ஏற்பதை நீ மறுத்துவிட்டாய். கடையில் எல்லாவற்றையும் நாசமாக்கி, உன்னையும் பிள்ளைகளையும் நடுத்தெருவில் நிறுத்திவிடப் போகிறேனே என்று அவர் துடித்த துடிப்பு...''

கண்களில் பெருகிய நீரைத் துடைத்துக் கொண்டு அவர் தொடர்ந்தார். ''கல்பனாவுக்கும் உனக்கும் மணமுடித்து வைத்து, தொழிலையும், நித்யாவின் வாழ்வையும் நான் சீராக்குவேன் என்று நான் வாக்குக் கொடுத்த பிறகுதான் அவர் நிம்மதியாக...'' என்று இன்னமும் 'இறந்தார்' என்று சொல்ல விரும்பாமல் நிறுத்தினார்.

ஒருகணம் மவுனமாய் இருந்துவிட்டு, "ஆனால் நான் கல்பனாவின் தந்தையிடம் பணம் எதுவும் பெறவில்லையே, அம்மா," என்றான் சத்யன்.

"ஆனால் முதலில் பணம் தரமறுத்த பாங்க் ஏஜெண்ட் பிறகு ஏன் தந்தார் என்று யோசித்தாயா? உனக்கு ஒன்று என்றால் கல்பனாவின் தந்தைபினை நிற்பார் என்ற தைரியத்தால்தானே," என்றவர் மேலே சொன்னார்.

"நீ கல்பனாவை மறுப்பதற்கான காரணத்தைத் தேடினேன். உன் பிடிவாதத்தை அறிந்த நான் உன்னிடம் பேசிப் பயன் இல்லை என்பதை உணர்ந்தேன். மதுராவிடம் ஓடினேன். நீ தேர்ந்தெடுத்த பெண் ஆயிற்றே தங்கமேதான். நான் கேட்டுக் கொண்டபடி எல்லாம் செய்தாள்... ஆனால், கண்ணா, இல்லாது போய்விட்ட ஒருவருக்காக உங்கள் இருவர் வாழ்வையும் கெடுத்து விட்டேன் என்று எண்ணுகிறாயா அப்பா?" என்றார் ஸ்ருத்தத்துடன்.

"அதில்லை அம்மா, ஆனால் இவள் நினைவில் நான் கல்பனாவிடம் பாராமுகம் காட்டியிருந்தால்... அவள் பிரஸ்ன இல்லையா?"

"பொறுப்பு என்று ஏற்றபிறகு அதை அரை குறையாகச் செய்கிறவன் நீ இல்லை என்பது தெரிந்து தான் துணிந்தேன். அவள் குறையுடன் போனாள் என்றா நினைக்கிறாய்?" என்றவர் மறுப்பாய்த் தானே தலையசைத்தார்.

எழுந்து குறுக்கும் நெடுக்குமாய் ஒருதரம் நடந்தவன் நின்று, "நீ ஏன் இதை என்னிடம் சொல்லவில்லை?" என்றால் மதுரர்விடம் கோபத்துடன்.

"அதிற்கும் நான்தான் காரணம். உன் அப்பாவை இழந்த நிலையில் உன் வெறுப்பை என்னால் தாங்க முடியாது என்று சொல்லி மதுராவின் வாயை அடைத்து விட்டேன். இன்றும் கூட உன் பாரா முகத்தை என்னால் பொறுத்துக் கொள்ள முடியாதுதான். ஆனால் அதை

விடவும் இந்தத் தங்கத்தின் வாழ்வு மிகவும் பெரிது. அதனால்தான் சொல்லி விட்டேன்..."

சட்டெனத் தாயின் அருகே வந்து மண்டியிட்டு கையைப் பற்றித் தன் கன்னத்தில் வைத்து அழுத்திக் கொண்டான் மகன். "உங்கள் அன்பு எனக்குத் தெரியாதா அம்மா! உங்களையாவது, நானாவது வெறுப்பதாவது?" என்றான்.

அன்னையின் முகம் தெளிவடைந்ததும் "ஆனால், கல்பனாவின் பிரிவுக்குப் பிறகும் ஏனம்மா சும்மா இருந்து விட்டீர்கள்? மூன்று ஆனடுகள், அம்மா!" என்றான் கொஞ்சம் குறையோடு.

"இல்லையப்பா. முதலிலேயே உனக்குத் தெரியாமல் மதுரைக்குச் சென்று இவளைத் தேடினேன். ஆனால் வீட்டையும் விற்றுவிட்டுப் போய் விட்டதாகச் சொன்னார்கள்." என்று மதுராவைப் பார்த்தார் மீனாட்சி.

உண்மைதான்; பெருந்தேவி அத்தையின் பேராசைக்கு பலியானவைகளில் அந்த வீடு ஒன்று.

'ஆம்' என்று மதுரா தலையசைக்கவும் மேலே தொடர்ந்தார் "ஒரு வேளை... நூற்றுக்கு ஒரு சதவீத வாய்ப்பாய் மதுராவுக்கு வேறு வாழ்வு அமைந்திருக்குமோ என்ற நினைப்பில் அதிகப்படியாக விசாரிக்கவும் பயமாக இருந்தது. உன்னையும் கவனித்துப் பார்த்தேன். நீயும் ஏங்கிக் கொண்டு இருப்பதாகத் தெரியவில்லை. நீதான் மனதை மறைப்பதில் சரியான கல்லுளி மங்கன் ஆயிற்றே." என்றார் திட்டுவது போல் பெருமை தொனிக்க.

"பின்னே, தேவதாஸ் மாதிரி புட்டியும் குமுறலுமாக அலைய வேண்டுமா?"

புன்கையை மதுரா அடக்க முயற்சிப்பதைக் கண்டு, "என்ன சிரிப்பு?" என்றான் அதட்டலாக அவன்.

''ஜிப்பாவும் புட்டியுமாக...'', என்றவள் சிரித்தபடியே மீனாட்சியின் தோளில் முகத்தைச் சாய்த்துக்கொண்டாள்.

பார்வை கனிவுற தானும் முறுவலித்தான் சத்யன்.

உடனேயே தாயிடம், ''திடீரென்று நீங்கள் எப்படியம்மா வந்தீர்கள்? திட்டமிட்டபடி நீங்கள் இப்போது ஜப்பானின் எரிமலைகளையல்லவா சுற்றிப் பார்த்துக் கொண்டிருக்க வேண்டும்?'' என்று விசாரித்தான்.

''நல்ல வேளையாக வந்ததால்தான் இங்கே எரிமலையை அணைக்க முடிந்துவிட்டது. எப்படி அடித்து விட்டாய்?'' என்று மதுராவின் கன்னத்தை மெல்ல வருடினார் மீனாட்சி.

ஒருகணம் முகம் மாறிய மகன் மீண்டும் வினவினான்.

''ஓவர்சீஸ் கால்' போட்டு முந்தாநாள் நித்யா என்னுடன் பேசினாள்...''

''நித்யா! அவளுக்கு என்ன தெரியும்?'' என்றான் சத்யன் திகைப்புற்று.

அவன் பார்வை கேள்வியுடன் மதுராவை நோக்குவதைக் கவனியாதவர்போல, ''ஏதோ தெரிந்ததால்தானே டெலிஃபோன் செய்திருக்கிறாள்'' என்றார் பொதுப்படையாக.

தன்னைக் காட்டிக் கொள்ளாமல் மீனாட்சி பேசுவது மதுராவுக்கு மிகவும் இதமாக இருந்தது.

ஆனால் அவளுக்கும் வியப்புதானே.

''நான் உங்கள் முகவரி வேண்டும் என்று அன்று கேட்டேன், ஆனால் இவ்வளவுக்கு நித்யா செயல்படக் கூடும் என்று நான் எதிர்பார்க்கவே இல்லை. அதைத் தீவிரமாக எடுத்துக் கொள்ளக்கூடும் என்று கூட நான் நினைக்கவில்லை'' என்றாள்.

மீனாட்சியும் வெளிப்படையாகப் பேசலானார்.

''எல்லாம் இந்த சிவாக் குட்டி தொடங்கி வைத்தது. அவனுக்குப்பெண்களை அதிகம் பிடிக்காது. ஆயா, நான், நித்யா என்று பொறுக்கி எடுத்தாற்போலச் சிலரிடம்தான் ஒட்டுதலாக இருப்பான். உன்னை அவனுக்குப் பிடித்திருந்தது என்பதே நித்யாவிடம் ஒரு குறுகுறுப்பை உண்டாக்கியிருக்கிறது. பார்த்ததும், உன் அழகு, மிடுக்கு, —வேலை, சம்பளம் எல்லாமாகச் சந்தேகத்தைக் கிளப்பி விட்டு விட்டன. உன்மேல் ஒரு கவனம் வைத்துக் கொள்ளும்படி தாமசை ஏவியிருக்கிறாள்.

''அன்று நீச்சல் குளத்தில் நீங்கள் இருவரும் நடந்து கொண்ட விதத்தில் அவனும் நித்யாவுக்கு எழுதி வர வழைத்திருக்கிறான்.

''அன்றுநீ என் முகவரியைக் கேட்டபோது நம்பிக்கை இழந்து ரொம்பவும் நொந்திருப்பதுபோலத் தோன்றியதாம். அதனால்தான் அவசரமாக எனக்குக் கால் போட்டிருக்கிறாள்...''

அவர் சொல்லச் சொல்ல மதுராவின் விழிகள் வியப்பால் விரிந்து வட்டமாயின.

நித்யா ஓர் அழகான பெண்; கெட்டிக்காரி; இனிய குணம்; கலகலப்பாகப் பழகுகிறவள் என்று மட்டும்தான் நினைத்திருந்தாள்.

இவ்வளவு புத்திசாலித்தனமாய்த் திட்டம் போட்டு வேலை செய்திருக்கிறாளே!

''சரியான அதிகப் பிரசங்கி. இனி ஒருதரம் என் விஷயத்தில் தலையிடட்டும் சொல்கிறேன்.'' என்று கூறி விட்டுச் சிரிக்கவும் செய்தான் சத்யன்,

''பாவம் அவள் அங்கே ஆவலோடு காத்துக்கொண்டு இருப்பாள். நான் போய் எல்லாம் சுபம் என்று சொல்லி விடுகிறேன். நீங்கள் இருவருமாய்த் திருமணத் தேதி எல்லாம், கொஞ்சம் சிக்கிரத்துக்குள் இருக்கும்படியாகவே முடிவு பண்ணுங்கள்.'" என்று எழுந்தார் மீனாட்சி.

சட்டென மதுராவின் முகம் சிவப்பதைப் பார்த்துச் சிரித்துவிட்டு வெளியேறினார்.

மதுராவின் முகத்தைப் பார்த்த சத்யனின் சிரிப்பு மறைந்தது.

"மதூ..." என்று கைகளை விரித்தான்.

அணைப்புக்குள் அடங்கியவனின் கன்னத்தை மிருதுவாக வருடி, "வலிக்கிறதா?" என்றான் வருத்தத்துடன்.

அவன் கையைப் பற்றி இதழ்களால் ஒற்றிவிட்டு அவன் மார்பில் முகம் புதைத்துக் கொண்டாள் மதுரா. விஷயம் வெளியானதும் வேலையை விட்டுச்சென்ற அப்பா தவிர எல்லோருக்கும் ஒரே சந்தோஷம்.

திருமணம் ஆனபின் முதல் இரவைத் தன் அறையிலேயே பிடிவாதமாக வைத்துக்கொண்டான் சத்யன். கேலியும் சிரிப்புமாக மதுராவை அறைக்குள் விட்டு விட்டு நித்யா சென்றாள்.

சோபாவில் அமர்ந்திருந்த அவன், "இங்கேவா." என்றான் அமைதியாக.

லேசான வியப்புடன் பேசாமல் அவன் சொன்னபடி செய்தாள் மதுரா.

எழுந்து அவளைக் கைகளில் ஏந்தியபடி மீண்டும் சோபாவிலேயே அமர்ந்தான் சத்யன்.

புரிந்து கொண்டு அன்று போலவே அவன் தோளில் முகம் புதைத்தாள் மதுராவும்.

சற்று நேரம் அப்படியே இருந்துவிட்டு அவள் முகத்தை நிமிர்த்தி குனிந்தான் அவன்.

விழிகளில் குறும்பு மின்ன, அன்று போலவே முகத்தை திருப்பிக் கொண்டு விலகத் தொடங்கினாள் அவள்.

அவரது விளையாட்டைப் புரிந்துகொண்ட அவன் கண்கள் பளபளக்க, "உதை கேட்கிறதா?" என்று மிரட்டிவிட்டு அவளை இறுகப் பற்றி அழுந்த முத்தமிட்டான்.

□ □ □